ஹரி: ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

வேதாந்தச் சொற்களஞ்சியம்

தொகுத்தவர்:

இராஜம்மாள் பாலகிருஷ்ணராஜா

வெளியீடு:

ஏ.எஸ். வேலாயுத ராஜா வேதாந்தப் பாடசாலை

42, பெரியகடை பஜார், இராஜபாளையம் - 626 117

தொலைபேசி: 04563-221473

கடவுள் வாழ்த்து

குரு ப்ரம்மா குரு விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரஹ
குரு சாக்ஷாத் பரப்ரம்மா தஸ்மை ஸ்ரீகுரவே நமஹா.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மண்ணுல கத்தினில் பிறவி மாசற,
எண்ணிய பொருள்எலாம் எளிதில் முற்றுற,
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுக
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

ஹரி: ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

முன்னுரை

வித்வான் **கொ. பூமிநாதன்** எம்.ஏ., எம்.எட்.,டி.ஏ.,
பேராசிரியர், ஏ. எஸ். வேலாயுதராஜா வேதாந்தப் பாடசாலை,
இராசபாளையம்.

வேதாந்தச் சொற்களஞ்சியம் - நெல்லைக் களஞ்சியத்தில் தொகுத்துச் சேர்த்து வைப்பது போல் சொல்லைச் சேர்த்துத் தொகுத்து வைத்திருப்பது சொற் களஞ்சியம். இதனைத் **தொகை அகராதி** என்று கூறவேண்டும்.

பள்ளித் தேர்வுகளில் "விரித்து எழுதுக" என்ற ஒரு வினா இப்போது இடம் பெற்றுள்ளது. அதாவது 'முத்தமிழ்' என்ற சொல் கொடுத்திருப்பர்; மூன்று + தமிழ் என்பது பிரித்தெழுதுதல்; மூன்று என்பதன் விரிவு இயல்; இசை, நாடகம் ஆகிய தமிழ் என விரித்து எழுதுவது விரித்து எழுதுதல், மூன்று எவை என அறிந்திருக்க வேண்டும். அதுபோல் வேதாந்தம் முதலியவற்றின் தொகைச்சொற்களின் விரிவு இந்நூலில் தரப்படுகிறது.

எடுத்துக்காட்டாக பதமுத்தி எத்தனை? அறிவதற்கு 4 எனக் கொடுப்பது மட்டுமின்றி, அவை யாவை? எனவும் கொடுப்பது.

1. சாலோகம் 2. சாமீபம் 3. சாரூபம் 4. சாயுட்சியம் என்பவை. இவற்றை அடையும் பதமுத்தி சாதனம் 4. 1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம் இவ்வாறு விரித்துக் கொடுத்திருப்பது பல தொகைகளையும் அறிய உதவும்.

ஆசிரியர் திருமதி **இராஜம்மாள் பாலகிருஷ்ணராஜா** அவர்கள் தாம்படித்த வேதாந்தநூல்களில் கண்ட தொகைகளை சட்டென அறியும்படி தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்நூலின்கண் இரண்டு முதல் இருபத்தியொரு தொகையின் விரிவுகள் தரப்பட்டுள்ளன. சிந்தனைக்கு இனிய விருந்தாக, தெளிவிற்கு இனிய மருந்தாக (அமிழ்து) இந்நூல் வேதாந்தம் கற்றவர்க்கு ஓர் வைப்பாகும். அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அடங்காது. ஆகவே, வாழ்த்த வேண்டும். வேதாந்த நூல்களையும், சாத்திர தோத்திர நூல்களையும் பயிற்றுவித்துப் பேருழைப்பு செய்து வருபவர் திரு.

ஏ. வி. கல்யாணவெங்கட்ராமன் அவர்கள். இவர்கள் நிறுவி நடத்தி வரும் ஏ. எ. வேலாயுதராஜா வேதாந்தப் பாடசாலயின் 3ஆம் வெளியீடாக இந்நூல் வருகிறது.

திங்கள்போல் திருமுகத்தில் சிந்தூரம் மின்னும்
 தினந்தோறும் நொடிப்பொழுதும் தெய்வநூலே பன்னும்
கொங்கலர்நூல் வேதாந்த கோவிந்த சாமி
 குடும்பத்துக் குலவிளக்கு ஞானதீப வாமி
மங்கையருள் வழிகாட்டி மதிமலர்த்தும் அல்லி
 வேதாந்த மரபினுக்கோர் மேலான வல்லி
நங்கையினர் பல்லாண்டு பலகோடி ஊழி
 நலம்பயக்கும் வாழ்நாளாய் நானம்போல் வாழி.

இவர் போல் நல்ல அறிவ்ய் நூல்கள் வெளியிட்டு இவ்வுலகில் நல்லவற்றை நிலைப்பாக புகழ் வெளிப்பாக எல்லோரும் வாழ்க!

Sri Ramakrishna Math

Reserve Line, New Natham Road, Madurai – 625 014
email: rkmath@eth.net 0452-2680224

அணிந்துரை

“வேதாந்தமாவது வேட்கை ஒழிந்த இடம்” என்கிறது திருமூலரின் திருமந்திரம்.

ஸ்தூல உலகிற்கு ஆதாரமாகவும், ஸ்தூல உலகிற்கு அப்பாலும் உள்ள சூட்சும வஸ்துவாகிய பிரம்மத்தைப்பற்றிய ஆராய்ச்சி எனலாம்.

‘பிரம்மமும் தானும் ஒன்றே’ என்ற அறிவு விழிப்பு பெற்றபிறகு வாழும் வாழ்க்கையை வேதாந்த வாழ்க்கை என்று சொல்லலாம்.

வேதாந்த நூல்களில் நுட்பம் மிகுந்த அரிய தத்துவங்கள் பொதிந்திருக்கின்றன.

வேதாந்த நூல்களைப் படிக்கும்போது, அவற்றில் உள்ள பல சொற்களுக்கு எளிதில் பொருள் விளங்குவதில்லை. அந்த நிலையில் வேதாந்தம் பயின்றவர்களை அணுகி, பொருள் தெரிந்து கொள்கிறோம்.

வேதாந்தம் பயின்றவர்கள் அரிதாகவே உள்ளனர். எனவே வேதாந்தச் சொற்களுக்கு உரியவரைத் தேடிச் சென்று, பொருள் தெரிந்து கொள்வதில் சிரமமும், தாமதமும் ஏற்படுகின்றன.

இந்த நிலையில் ஸ்ரீமதி இராஜம்மாள் பாலகிருஷ்ணராஜா அவர்களின் இந்த நூல் வேதாந்தச் சொற்களுக்கு உரிய பொருள்களைத் தொகுத்து வழங்கியிருக்கிறது.

1. உபநிஷதங்கள், 2. பிரம்மசூத்திரம், 3. பகவத்கீதை ஆகியவை ‘ப்ரஸ்தானத்ரயம்’ எனப்படும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த மூன்றையும், “சுருதி, யுக்தி, அனுபவம்” என்று கூறி, 1. உபநிஷத்-அடிப்படைத்

தத்துவத்தை விளக்குவது (சுருதி) 2. பிரம்மசூத்திரம் - தத்துவத்தை தர்க்கரீதியாக விளக்குவது (யுக்தி), 3. பகவத்கீதை - சாதகன் தன் வாழ்வில் இந்தத் தத்துவத்தை நேரடியாக உணர்வது (அனுபவம்) என்ற விளக்கமும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது.

'ஞானம்' என்பதற்குப் பல விளக்கங்கள் உண்டு. இந்த நூலில், "அஞ்ஞானியை மரணம் சரீரத்தை விட்டுப் பிரிக்கிறது. ஞானியை ஆத்மஞானம் உயிருடன் இருக்கும்போதே சரீரத்தை விட்டுப் பிரிக்கிறது. எல்லாம் ஈசன் செயல் என்று உணர்வது ஞானம்" என்ற நல்ல ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

'சிகரங்கள் நான்கு' என்று இந்த நூலில் கூறிய ஸ்ரீமதி இராஜம்மாள் பாலகிருஷ்ணராஜா அவற்றை முறையே, "1. கர்மத்தின் சிகரம் - தன்னை தியாகம் செய்வது, 2. பக்தியின் சிகரம் - பூரண சரணாகதி, 3. யோகத்தின் சிகரம் - நிர்விகல்ப சமாதி, 4. ஞானத்தின் சிகரம் - விசாரணை" என்று வகைப்படுத்தியும் காட்டியிருக்கிறார்.

எனவே இந்த நூல் வேதாந்த நூல்களைக் கற்கத் துவங்குபவர்களுக்கும், ஏற்கனவே ஓரளவு வேதாந்த நூல்களில் பயிற்சியுள்ளவர்களுக்கும், ஓர் அகராதி போன்று ஐயம் தெளிவிக்கும் ஆசானாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவரது பணி வாழ்க! வளர்க! வெல்க!

ஸ்ரீமதி இராஜாம்மாள் பாலகிருஷ்ணராஜா அவர்களுக்கு நீண்ட ஆயுள், ஆரோக்கியம் உட்பட அனைத்து நலன்களையும் தந்தருளும்படி ஸ்ரீமீனாட்சி - சுந்தரேஸ்வரர்கள், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

இறைவன் தொண்டில்
தங்களன்புள்ள,

சுவாமி கமலாத்மானந்தர்
தலைவர்.

ஹரி: ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

ஏகம் பிரம்மம்

இரண்டின் தொகைகள்

1. ஆத்மா – 2
1. ஜீவாத்மா,
2. பரமாத்மா

2. பிரபஞ்சம் – 2
1. பாஹியப்பிரபஞ்சம் (ஜகத்)
2. ஆந்திரப்பிரபஞ்சம்

3. ஞானம் – 2
1. சொரூப ஞானம்,
2. விருத்தி ஞானம்

4. விருத்திஞானம் – 2
1. பரோட்ச ஞானம் (கேள்வி ஞானம்)
2. அபரோட்ச ஞானம் (பிரத்யட்ச ஞானம்)

5. அபரோட்சஞானம் – 2
1. மந்த ஞானம்,
2. திட ஞானம்

சம்சய சஹிதமாக அறிவது **மந்த ஞானம்**
சம்சய ரஹிதமாக அறிவது **திட ஞானம்**

6. விருத்தி - 2
1. இதம் விருத்தி,
2. அஹம் விருத்தி

7. விருத்திரூபஞானம் - 2
1. ப்ரமாரூப விருத்தி,
2. அப்பிரமாரூபவிருத்தி

ப்ரமாணத்தினால் உண்டாகும் ஞானம் **ப்ரமாரூபம்**
ஈஸ்வர ஞானம், சுகாதிகோசரஞானம்
ஸ்மிருதிஞானம், ப்ரமாரூப ஞானம் இவைகள் **அப்பிரமாரூபம்**

8. அஞ்ஞானம் - 2
1. ஸ்தூல அஞ்ஞானம்
2. மூல அஞ்ஞானம்

கடபடாதி விஷயங்களை மறைப்பது ஸ்தூலஅஞ்ஞானம்
சுத்தசேதனத்தை மறைப்பது மூலஅஞ்ஞானம்.

9. பாஷ்யம் - 2
1. சாட்சி பாஷ்யம்
2. பிரமாதா பாஷ்யம்

அவித்யா விருத்தி வாயிலாக வஸ்துவை எது விளக்குவிக்கின்றதோ அது **சாட்சி பாஷ்யம்** (சுக, துக்கம்) பாதிக்கப்படும் பொருளை விஷயம் செய்வது உ-ம்: ரச்சு, சர்ப்பம்

அந்தக் கரண விருத்தி வாயிலாக வஸ்துவை எது விளக்குவிக்கின்றதோ அது பிரமாதா பாஷ்யம் பாதிக்கப்படாத பொருளை விஷயம் செய்வது உ-ம்: கடம், படம்

10. சக்தி - 2
1. ஆவர்ணசக்தி,
2. விட்சேப சக்தி

11. ஆவர்ணம் - 2
1. அஸத்வஆபாதக ஆவர்ணம்
2. அபானஆபாதக ஆவர்ணம்

12. பிரகாசம் - 2
1. ஆபாஸப்பிரகாசம்
2. சேதனப்பிரகாசம்

பாஹ்யத்தில் வியாபகப் பிரகாசம்
ஆந்திரத்தில் சைதன்யப் பிரகாசம்

13. சம்சயம் - 2
1. பிரமாணகதசம்சயம்,
2. பிரமேயகதசம்சயம்

பிரமாணகதசம்சயம் சுருதி பிரம்மத்தைச் சொல்கிறதா? அன்னியத்தைச் சொல்கிறதா? என்ற சந்தேகம்.
பிரமேயகதசம்சயம் ஜீவப் பிரம்மங்களின் பேதம் சத்தியமா? அபேதம் சத்தியமா? என்ற சந்தேகம்.

14. சமாதி - 2
1. சவிகற்பசமாதி,
2. நிர்விகற்பசமாதி

15. சவிகற்பம் - 2
1. சப்தானுவித்தம்,
2. சப்தானுஅன்வித்தம்

சப்தானுவித்தம் அஹம் பிரம்மாஸ்மி என்னும் சப்தத்தோடு கூடியது.
சப்தானுஅன்வித்தம் அந்த சப்தமும் இல்லாதது

16. நிர்விகற்பசமாதி - 2
1. அத்வைதபாவனாரூபம்
2. அத்வைதஅவஸ்தானரூபம்

அத்வைதபாவனாரூப நிர்விகற்ப சமாதி
அத்வைதப் பிரஹ்மாகாரமான அந்தக் கரணத்தின் சூக்ஷ்மவிருத்தியோடு கூடிய நிர்விகற்பசமாதி

அத்வைதஅவஸ்தானரூப நிர்விகற்ப சமாதி
அந்த விருத்தியும் கரைந்து திரிபுடித் தோற்றமின்றி தியானவஸ்து மாத்திரம் சேடித்திருப்பது

17. மோக்ஷம் - 2
1. துக்க நிவர்த்தி,
2. பரமானந்தப் பிராப்தி

மோக்ஷம் சொரூபம் -2
1. சம்சார நிவர்த்தி
2. சொரூப அவஸ்தானம்

மோக்ஷம் என்றால் பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தில் இருந்து விடுபடுவதே மோக்ஷம். முமூக்ஷிவான ஜீவன் தன் சொரூபத்திலேயே நிலைத்து இருத்தல் மோக்ஷம் ஆகும்.

சம்சார நிவர்த்தி: இந்த சரீரத்திலிருந்து வேறு சரீரத்திற்குச் செல்வதற்குக் காரணம் புண்ணிய, பாப கர்மங்களேயாகும். இந்த புண்ணிய, பாப கர்மங்கள் ஒவ்வொரு ஜீவனுக்கும் இந்த சம்சாரத்திற்குக் காரணமாக இருக்கின்றது. இந்த கர்மங்கள் எல்லாம் எப்பொழுது பூர்ணமாக தீர்கின்றதோ, அப்பொழுது இந்த சம்சாரம் என்ற சக்கரம் இல்லாமல் போகும். அதனால் ஒவ்வொரு ஜீவனும் கர்மங்களை அழிப்பதன் மூலமாக சம்சாரத்திலிருந்து விடுபடுவது சம்சார நிவர்த்தி (சர்வ துக்க நிவர்த்தி) என்கின்ற மோக்ஷம் (ஜீவன் முக்தி)

சொரூப அவஸ்தானம் (சொரூபத்தில் நிலைத்தல்)

நான் ஜீவன் கிடையாது. மூன்று காலத்திலும் நான் பிரம்மமாகவே இருக்கின்றேன் என்ற எண்ணத்தை மறக்காமல் எப்பொழுதும் நினைத்துக் கொண்டு இருப்பதே சொரூப அவஸ்தானம். (பரமானந்த பிராப்தி) என்கின்ற மோக்ஷம். (விதேக முக்தி)

18. உபாதி - 2
1. சோபாதிகம்,
2. நிரூபாதிகம்

ஒரு வஸ்து பலவாறாக தோன்றுவதற்கு காரணமாக இருக்கும் வஸ்து அல்லது தன்னுடைய தர்மத்தை பொய்யாக வேறொன்றில் காட்டுவது உபாதி

உபாதியோடு கூடியது **சோபாதிகம்**

உபாதியற்றது **நிரூபாதிகம்**

சோபாதிகம்

பொய்யென்று தெரிந்த பின்னரும் தோன்றிக் கொண்டு இருப்பது (உ-ம்) பிரபஞ்சம், கானல்நீர் கண்ணாடியில் பிரதிபிம்பம், தண்ணீரில் தலைகீழாய் தெரிவது.

நிரூபாதிகம்

பொய்யென்று தெரிந்த பின்னர் தோன்றாமல் இருப்பது (உ-ம்) ரஜ்ஜுவில் தோன்றும் சர்ப்பம். சொப்பனப் பொருளும், சொப்பனமும்

பிராந்தி த்வயம்

1. சோபாதிகப் பிராந்தி

உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தினால் தோன்றும் பிராந்தி சோபாதிகப் பிராந்தி.

2. நிரூபாதிகப் பிராந்தி

கேவல அஞ்ஞானத்தினால் தோன்றும் பிராந்தி நிரூபாதிகப் பிராந்தி.

19. பலம் - 2
1. திருஷ்ட பலம்,
2. அதிருஷ்ட பலம்

திருஷ்ட பலம் - குரு உபதேசம்

அதிருஷ்ட பலம் - ஈஸ்வரன் அனுக்கிரஹம்

20. அஹங்காரம் - 2
1. முக்கிய அஹங்காரம்
2. அமுக்கிய அஹங்காரம்

முக்கியம் - பகுத்துக் காணாத மூடர்கள் அவிவேகத்தினால் ஒருமைப்பாடாக நான் வந்தேன், நான் போனேன் என்று சிதாப்பாசனாகப் பேசுகிறது முக்கிய அஹங்காரம்

அமுக்கியம் - (லக்ஷணா விருத்தியினாலும், விவேகத்தினாலும் பகுத்துக் கொண்ட ஞானி) நான் அசங்கன், நான் சின்மாத்திரன் என்று பேசுகிறதும், வியவகாரத்தில் நான் வந்தேன் நான் போனேன் என்று பேசுகிறதும் அமுக்கிய அஹங்காரம்

21. அத்யாத்மதாபம் - 2
1. மானசதாபம்
2. சரீரதாபம்

மானசதாபம் - காமக்குரோதம், அசூயை, மதம், மாச்சர்யம், பசி, தாகம் முதலியவற்றால் சம்பாதித்த வியாகூலத் தன்மை.

சரீரதாபம் - ஜ்வரம், குல்மம், முதலிய ரோகதோஷத்தால் சம்பாதித்த துக்கம்

22. வாசனை - 2
1. சுபவாசனை
2. அசுபவாசனை

சுபவாசனை - சாஸ்திர வாசனை
அசுபவாசனை - தேகவாசனை, லோகவாசனை

23. முக்தி - 2 (விடுதலை)
1. ஜீவன்முக்தி,
2. விதேகமுக்தி

ஜீவன்முக்தி - பிரபஞ்சம் தோன்றிக் கொண்டு இருக்க அத்வைத சொரூபத்தில் நிலைத்தல்.

விதேகமுக்தி - பிரபஞ்சம் தோற்றமில்லாது இருக்க அத்வைத ப்ரஹ்மசொரூபமாகவே இருப்பது.

24. சிரவணம் - 2
1. அங்கசிரவணம்
2. அங்கிசிரவணம்

அங்கசிரவணம் - ஷட்விதலிங்க தாத்பர்யத்தோடு கூடிய சிரவணம் (சாதனம்)
அங்கிசிரவணம் - தத்துவமஸி .மகா வாக்கியத்தோடு செய்த சிரவணம் (சாத்யம்)

25. உபாசனை - 2
1. க்ருதஉபாசனை,
2. அக்கிருதஉபாசனை

26. பிரக்ருதி - 2
1. பராபிரக்ருதி,
2. அபராபிரகிருதி

27. வாக்கியம் - 2
1. அவாந்தரவாக்கியம்,
2. மஹாவாக்கியம்

அவாந்தரவாக்கியம் - பரோட்சஞானம்
மஹாவாக்கியம் - அபரோட்சஞானம்

28. பிரயோஜனம் - 2
1. அவாந்தரப்பிரயோஜனம்,
2. பரமப் பிரயோஜனம்

அவாந்தரம் - சாதனம் (ஞானம்)
பரமம்- சாத்யம் (மோக்ஷம்)

29. சாதனம் - 2
1. பஹிரங்க சாதனம்,
2. அந்தரங்க சாதனம்

பஹிரங்க சாதனங்கள் - எக்ஞும், தானம், தவம்

அந்தரங்க சாதனங்கள் - விவேகாதிகள் 4, சிரவணாதிகள் 3, மஹாவாக்கிய விசாரம் 1

30. மார்க்கம் - 2
1. பிப்பிலிகா மார்க்கம் (எறும்பு)
2. பக்ஷி மார்க்கம்

31. தண்டம் - 2
1. அகக்கரணதண்டம் (மனநிக்கிரஹம்)
2. புறக்கரணதண்டம் (இந்திரிய நிக்கிரஹம்)

32. நிவர்த்தி - 2
1. லயரூபநிவர்த்தி
2. அத்தியந்தநிவர்த்தி

லயரூபநிவர்த்தி - கடம் மீண்டும் மண்ணில் ஒடுங்குவது

அத்தியந்தநிவர்த்தி - எரிக்கப்பட்ட வஸ்திரம் போல

33. தந்திரம் - 2
1. புருட தந்திரம்,
2. வஸ்து தந்திரம்

புருட தந்திரம் - தியானம்

வஸ்து தந்திரம் - ஞான விசாரத்தினால் உண்டாவது

தியானம் - கற்பிதம், ஞானம் - வாஸ்தவம்

34. கற்பிதத்வயம் - 2
1. அத்தியாரோபம் (தோற்றம்)
2. அபவாதம் (ஒடுக்கம்)

35. சமாதியில் இருப்பவர்கள் - 2
1. சமாஹிதர்,
2. உத்திதர்

சமாஹிதர் - எப்போதும் சமாதியில் இருப்பவர்கள்

உத்திதர் - சமாதியிலிருந்து எழுந்து பற்றில்லாமல் விவகாரம் செய்பவர்கள் (உ-ம்) ஜனகர்

36. யோகம் - 2
1. அங்கியோகம்
2. அங்கயோகம்

அங்கியோகம் - சித்தநிரோதம்
அங்கயோகம் - அதன் சாதனம்

37. சத்தை - 2
1. சமசத்தை
2. விஷமசத்தை

சமசத்தை - சமமாக உள்ள சத்தை
விஷமசத்தை - சமமில்லாத சத்தை (வேறு சத்தை)

38. விஞ்ஞான தாரை - 2
1. ஆலயவிஞ்ஞான தாரை
2. பிரவிருத்தி விஞ்ஞான தாரை

ஆலயவிஞ்ஞானதாரை - அஹம் அஹம் என்பது
பிரவிருத்திவிஞ்ஞானதாரை - இது கடம், இது சரீரம் என்று புத்தி பிரவிர்த்திப்பது.

39. ஆத்மாவில் தோஷம் - 2
1. வர்ண விசிஷ்ட வஸ்திரம் (அஞ்ஞானம்)
2. வர்ண உபகித ஸ்படிகம் (அத்தியாஸம்)

40. அருத்தாபத்திபிரமாணம் - 2
(அருத்தத்துக்கு ஆபத்து நேரிடல்)
1. திருஷ்டாருத்தாபத்தி
2. சிரவணாருத்தாபத்தி (சுருதாருத்தாபத்தி)

பகல் காலத்தில் உண்ணாது நித்தியவுபாசி இளைக்காது பெருத்திருப்பதைக் கண்டு ராக்காலத்தில் உண்பான் எனக் கற்பித்தல் **திருஷ்டாருத்தாபத்தி**.

(தாஷ்டாந்தம்) விஷயங்களையனுபவித்து ஆனந்தியாதவன், முகத்தில் பிரமதேஜசு பிரகாசிக்கின்றதைப் பார்த்து உள்ளே பிரஹ்மானந்தம் பிரத்தியக்ஷமாயடைந்திருக்கிறான் எனக் காண்பது.

சிரவணாருத்தாபத்தி (சுருதாருத்தாபத்தி)

இங்கிருந்த தேவதத்தனவன் வீட்டில் இல்லை என்றால், வேறொரு இடத்திலிருப்பான் எனக் குறிப்பால் தெரிந்து கொள்ளுதல்.

தாஷ்டாந்தம் -

அறிவினிடத்து அதீதானுபவம் இல்லை எனில், ஆனந்தத்தில் இரக்கும் என்பது.

41. காரியஅத்தியாசம் -2

1. அர்த்தாத்தியாசம் (பொருள்)
2. ஞானாத்தியாசம் (உணர்வு)

42. பிரஞ்ஞை - 2

1. ஸ்திதப் பிரஞ்ஞை
2. அஸ்திதப் பிரஞ்ஞை

43. மனம் - 2

1. உருவமனம்,
2. அருவமனம்

44. நிக்கிரஹம் - 2

1. கிரமநிக்கிரஹம்,
2. ரூட (ஒரு முறை) நிக்கிரஹம்

45. சப்தம் - 2

1. தொனி ரூபம்,
2. வருண ரூபம்

46. வருணரூப சப்தம் - 2

1. லௌகீகம்
2. வைதீகம்

லௌகீகம் - ஆரியம், திராவிடமாகிய 18 பாஷைகளால் செய்யப்பட்ட விநோதாதி சரித்திரப் பிரசங்கங்களில் எழுகின்ற சப்தங்கள்.

வைதீகம் - வேதாகம சாஸ்திர புராண பாடங்களிலும், பிரணவ, பஞ்சாட்சர, அஷ்டாக்ஷர சடாக்ஷர, ஆகிய மந்திர உச்சாரணங்களிலும் பகவத் சங்கீர்த்தனமாகிய தேவதா ஸ்தோத்திரங்களிலும் நின்று எழுகின்ற சப்தம்.

47. சிருஷ்டி -2 பிரகிருதி காரியோதய த்வயம்

1. கிரமசிருஷ்டி
2. யுகபத்சிருஷ்டி

கிரமசிருஷ்டி - மூலப் பிரகிருதி (மாயை)யினின்று மகத்த்வமும், அதனின்று அகங்காரமும், அதனின்று தன் மாத்ரா பஞ்சகமும், அவற்றினின்றும் ஸ்தூல பஞ்சபூதமும், அவற்றின்று பிரமாண்ட புவன சரீர கடாதிப் பிரபஞ்சமும் முறையே உற்பத்தியாதலாம்.

யுகபத்சிருஷ்டி - அலையற்ற சமுத்திரத்தினின்றும், ஏக காலத்தில் வாயு வசத்தால் விசித்திரமான் நுரை, திரை, குமிழியாதிகளுதயமாவது போலச் சச்சிதானந்த ப்ரஹ்மத்தில் ஏக்காலத்தில் மாயா வசத்தால் நாமரூபப் பிரபஞ்சம் உண்டாதலாம்.

48. பரமஹம்ச சந்நியாசம் - 2

1. விவிதிதா சந்நியாசம்
2. வித்வத் சந்நியாசம்

விவிதிதா சந்நியாசம் - ஞான சப்தபூமிகளும், சுபேசைஷ, விசாரணை, தனுமானசி என்னும் மூன்று பூமிகளையுமடைந்து அறியத்தக்கதையறிய வேண்டும் என்னும் இச்சையால் செய்து கொள்ளும் சந்நியாசம்.

வித்வத் சந்நியாசம் - சிரவண மனன நிதித்தியாசன்ங்களின் வலியால் பிரஹ்மத்தைத் தன் சொரூபமாக வரிந்த ஞானானந்தரம் (வாசனாக்ஷய மனோநாச தத்துவ ஞானங்களின் அப்பியாச வாயிலாக) ஜீவன் முக்தி சுகத்தையபேக்ஷீத்துச் செய்து கொள்வதாகிய சந்நியாசமாம்.

49. விருத்தி - 2

1. சக்தி விருத்தி,
2. லக்ஷணா விருத்தி

சப்தத்தில் அர்த்தத்தின் ஞானத்தையுண்டு பண்ணும்
சாமர்த்தியம் (ஆற்றல் வடிவ சம்பந்தம்) **சக்தி விருத்தி**யாம்.

பதத்தின் அர்த்தத்தின் சம்பந்தியாகிய வேறு பொருத்தமான அர்த்தத்தின் ஞானத்தை உண்டு பண்ணும் சாமர்த்தியம் **லக்ஷணா விருத்தி**யாம்.

50. சமாதி - 2

1. சம்பிரஞ்ஞாத சமாதி,
2. அஸம்பிரஞ்ஞாத சமாதி

அறியப்படும் விஷயம் உள்ளது எல்லாம் **சம்பிரஞ்ஞாதசமாதி**.
அந்த உணர்வையும் கடந்தது **அஸம்பிரஞ்ஞாதசமாதி**.

51. அத்தியாசங்கள் - 2

1. காரணாத்தியாசம்,
2. காரியாத்தியாசம்

காரணாத்தியாசம்

காரிய பிரபஞ்சத் தோற்றமாகிய அத்தியாசத்துக்கு காரணமாயுள்ள அஞ்ஞானத் தோற்றமே.

காரியாத்தியாசம்

காரணமாகிய அஞ்ஞானத்தால் தோன்றும் தேகாதிப் பிரபஞ்சங்கள் காரியங்களானமையால், இவைகளின் தோற்றமாகிய அத்தியாசம் காரியத்தியாசம்.

52. ஞானம் - 2

1. விசார ஞானம்,
2. சமாதி ஞானம்

விசார ஞானம் - ஒரு மரத்தில் இயற்கையாய் எப்போதும் வளைந்திருக்கிற கிளையைப் போல சதா காலமும் பிரம்மாகார விருத்தியிலேயே ஆரூடனாய் இருப்பது.

சமாதி ஞானம் - கனியின் பாரத்தால் கிளை வளைவதும் கனி இல்லாத போது கிளை நேராவதும் போல, சமாதியின் போது, ஞான விருத்தியுடனும், சமாதி கலைந்ததும் மனது மறுபடியும் வியவகாரம் செய்வது.

53. **காரணம் - 2**

1. உபாதானக் காரணம்
2. நிமித்தக் காரணம்

கடத்தின் சொரூபத்தில் மண் போல, எது காரியத்தின் சொரூபத்தில் பிரவேசமாமோ, எதின்றிக் காரியத்தின் ஸ்திதி கூடாதோ அது **உபாதான காரணம்** எனப்படும்.

எது காரியத்தின் சொரூபத்தில் பிரவேசமாகாமல், காரியத்திற்கு வேறாயிருந்து குலாலன் போலச் செய்கிறதோ, எது நசித்ததால் காரியம் கெடாதோ அது **நிமித்தக் காரணம்** எனப்படும்.

உலண்டுப் பூச்சி போல ஈசவரனுடைய சரீரமான சடமாகிய மாயை ஜகத்துக்கு உபாதான காரணம்.

சேதனபாகம் நிமித்த காரணம்.

மூன்றின் தொகைகள்

1. பிரஹ்மத்திரயம் - 3

1. விராட்டு, 2. இரண்யகர்ப்பன், 3. ஈஸ்வரன்

2. ஜீவத்திரயம் - 3

1. விசுவன், 2. தைஜசன், 3. பிராக்ஞன்

3. ஆத்மத்திரயம் - 3

1. ஜீவாத்மா, 2. அந்தராத்மா, 3. பரமாத்மா

ஆத்மா - ஜாக்கிரத்தில் சாக்ஷியாயிருக்கும் பொழுது **ஜீவாத்மா** என்றும், சொப்பனத்தில் சாக்ஷியாயிருக்கும் பொழுது **அந்தராத்மா** என்றும், சுழுத்தியில் சாக்ஷியாயிருக்கும் பொழுது **பரமாத்மா** என்றும் கூறுவர்.

இதற்கு திருஷ்டாந்தம்.

ஜாக்கிரத்தில் ஜீவாத்மா - தப்தாய பிண்டம்போல
சொப்பனத்தில் அந்தராத்மா - தாமரை இலைத் தண்ணீர் போல
சுழுத்தியில் பரமாத்மா - சூரியனைப் போல

4. சரீரத்திரயம் - 3

1. ஸ்தூல சரீரம், 2. சூட்சம சரீரம், 3. காரண சரீரம்

ஸ்தூல சரீரம்

தோல், இரத்தம், சதை, நரம்பு, எலும்பு, கொழுப்பு என்ற 6 தத்துவங்களுடன் கூடியது.

சூட்சும சரீரம்

ஞானேந்திரியங்கள்	-	5
கர்மேந்திரியங்கள்	-	5
பிராணாதி வாயுக்கள்	-	5
அந்தக் கரணம்	-	5

ஆக 20 தத்துவங்களுடன் கூடியது.

காரண சரீரம்

அவித்தை, வித்தை, ஜீவன், ஈசுவரன் என்ற 4 தத்துவங்களுடன் கூடியது.

5. ஜீவ அவஸ்தை - 3

1. ஜாக்ரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி

6. ஈஸ்வர அவஸ்தை - 3

1. சிருஷ்டி, 2. ஸ்திதி, 3. சம்ஹாரம்

7. ஈஸ்வர அபிமானி - 3

1. சூத்ராத்மா, 2. அந்தர்யாமி, 3. வைசுவானரன்

8. காரணம் - 3

1. உபாதான காரணம் (மாயை)
2 நிமித்தகாரணம் (ஈஸ்வரன்)
3. அபித்த நிமித்த உபாதான காரணம் (பிரஹ்மம்) சேதனம்

9. கர்மம் - 3

1. சஞ்சித கர்மம், 2. ஆகாமிய கர்மம், 3. பிராரப்த கர்மம்

10. கர்மம் - 3

1. புண்ணியம், 2. பாபம், 3. மிஸ்ரம்

11. பிராரப்த கர்மம் - 3

1. இச்சை, 2. அனிச்சை, 3. பரோட்சை

12. ஞான பிரதிபந்தம் - 3

1. அஞ்ஞானம், 2. சந்தேகம், 3. விபரீதம்

13. மோக்ஷ பிரதிபந்தம் - 3

1. பூத, 2. பவிஷ்ய, 3. வர்த்தமானம்

14. சம்பந்தம் - 3

1. சையோகசம்பந்தம், 2. ஸமவாயசம்பந்தம், 3. தாதாத்மியசம்பந்தம்

சையோகசம்பந்தம் -	மரக்கிளை பறவை போல
ஸமவாயசம்பந்தம் -	வேம்பு அதன் கசப்புப் போல
குணகுணிசம்பந்தம் -	மிளகாய் அதன் காரம் போல
	பசு அதன் நிறம் போல
தாதாத்மியசம்பந்தம் -	கயிற்றில் பாம்பு போல

15. ஞானகுருவின் லட்சணம் -3

1. ஸ்மாரக, 2. வாரக, 3. தாரக

ஸ்மாரக - சத்யத்தை இடைவிடாமல் நினைப்பவர்
வாரக - அதற்கு விரோதமானதை விலக்குபவர்
தாரக - தானும் பிரம்மத்தில் நிலைபெற்று பிறரையும் நிலை பெறச் செய்பவர்.

16. கரணத்திரயம் - 3

1. மனம், 2. வாக்கு, 3. காயம்

17. காலத்திரயம் - 3

1. பூத காலம் (இறந்த காலம்)
2. பவிஷ்ய காலம் (எதிர் காலம்)
3. வர்த்தமான காலம் (நிகழ் காலம்)

18. குணத்திரயம் - 3

1. சத்வம், 2. ரஜஸு, 3. தமஸு

19. தாபத்திரயம் - 3 (துக்கம்)

1. அத்யாத்மிக துக்கம்,
2. ஆதிபௌதீக துக்கம்,
3. அதிதெய்வீக துக்கம்

அத்யாத்மீகம் - ஆத்மாவை ஆசிரியித்திருக்கின்ற தூல சூட்சும சரீரங்களைப்பற்றி வருகின்ற துக்கம்

ஆதிபௌதிகம் - தனது சேர்க்கைக்கு வேறாயும், இந்திரியங்களுக்கு விஷயமாயுமுள்ள சத்துரு, திருடன், நாய், புலி, யானை, சர்ப்பம், முதலையாகிய அன்னியப் பிராணிகளிடமிருந்துவரும் துக்கம்.

அதிதெய்வீகம் -

தனது சேர்க்கைக்கு வேறாயினவாயும் கண் முதலிய இந்திரியங்களுக்கு விஷயமல்லாதனவாயும், உள்ள தெய்வங்களாலும், இவைகளால் நடத்தப்பட்ட யக்ஷ, ராக்ஷச, பிசாசு கிரகாதிகளாலும், மிகுபனி, மிகுமழை, இடி, காற்று, வெயில் மதில் இடிந்து விழுதல், மரமொடிந்து விழுதல் ஆகியவற்றினாலும் வரும் துக்கம்.

20. மங்கலத் திரயம் - 3

1. நமஸ்காரரூபமங்கலம்,
2. ஆசீர்வாதரூபமங்கலம்,
3. வஸ்துநிர்த்தேசரூபமங்கலம்

நமஸ்காரரூபமங்கலம் - வஸ்துவிற்கு வணக்கம் கூறுவது

ஆசீர்வாதரூபமங்கலம்

இஷ்டவஸ்துவைப் பிரார்த்திருப்பது (வாழ்த்துவது) அதாவது, பந்தத்தை நீக்கிச் சுகத்தைக் கொடுத்து இரட்சிக்கும் தீனதயாளுவான ஈஸ்வரர் (குருநாதர்) உண்டோ அந்தக் கருணை நிதி இந்தக் கிரந்தத்தைப் படிப்பவர், கேட்பவர்களது ஜன்மாதி துக்கத்தை நிவர்த்திப்பீராக என்பதாம்.

வஸ்துநிர்த்தேசரூபமங்கலம்

சகுணம் அல்லது நிர்க்குணமாகவுள்ள பரமாத்மவஸ்துவின் கீர்த்தனம்.

21. சமானாதிகரண்யத் திரயம் - 3

1. சமானாதிகரண்யம், 2. பாதசமானாதிகரண்யம், 3. முக்கியசமானாதிகரண்யம்

சமானாதிகரண்யம்

வெவ்வேறு பிரவிருத்திகளையுடைய இரண்டு பதங்களுக்கு ஒன்றன்கண் ஐக்கியத்தைக் கூறுவது

(உ-ம்) தத்பதம் - துவம்பதம் (சர்வக்ஞ்தவம்) - (கிஞ்சிஞ்சித்வம்)

பாதசமானாதிகரண்யம்

ஜீவத்வத்தை பாதித்து பிரஹ்மத்தோடு அபேதம் கூறுவது

முக்கிய பாதசமானாதிகரண்யம்

ஆத்மாவிற்கும், பிரஹ்மத்திற்கும் ஐக்கியம் கூறுவது

(உ-ம்) கடாகாயம் - மஹாகாயம்

22. லக்ஷணத்ரயம் - 3 (ஆத்ம தரிசன உபாயம்)

1. சொரூபலட்சணம், 2. தடஸ்தலட்சணம், 3. அதத்யாவிருத்திலட்சணம்

சொரூபலட்சணம்

சச்சிதானந்த சொரூப லக்ஷணங்களில் ஆத்மாவைப் போதிப்பதாம். அதாவது, மிகுந்த லோகிதம், உஷ்ணப் பிரகாசமே அக்கினி, அல்லது சூரியனென்பது போல ஆத்மாவின் நிஜரூபம் இது என்று அறிவிப்பது.

தடஸ்தலட்சணம்

ஜகத்ஜன்மாதிலக்ஷணங்களால் ஆத்மாவைப் போதிப்பதாம்
விருக்ஷத்தினுனியில் சந்திரன் இருப்பதாகக் காட்டுவது போலப் பூத முதல் ஸ்தூல தேகம் வரையுமுள்ள நிலைகளை காட்டி ஆத்மாவை அறிவிப்பதாம்.

அதத்தியாவிருத்திலட்சணம்

அசங்க அஸ்தூலாதி லக்ஷணங்களால் ஆத்மாவைப் போதிப்பதாம். அதாவது, தேகாதியனாத்ம வர்கங்களை யுக்தியால் இது நானல்ல, இது நானல்ல என்று நேதித்து நின்ற ஆத்மாவை அறிவிப்பது.

23. லக்ஷணையின் பேதத்திரயம் - 3

1. விட்டலக்ஷணை,
2. விடாதலக்ஷணை,
3. விட்டுவிடாதலக்ஷணை (பாகத்தியாக லக்ஷணை)

லக்ஷணை என்றால், யாதோர் அர்த்தத்தில் பதத்தின் சக்தியுண்டோ, அவ்வர்த்தம் பதத்திற்குச் சக்கியம் எனப்படும். இந்த சக்கிய சம்பந்தம் தான் லக்ஷணை எனப்படும்.

விட்டலக்ஷணை

வாச்சியார்த்தங்கள் முழுமையும் விடுத்து, அதன் சம்பந்தியை உணர்த்துவது, விட்டலக்ஷணை (உ-ம்) கங்கையில் கிராமம்.

விடாதலக்ஷணை

வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விடாமல் அதன் சம்பந்தியை உணர்த்துவது, விடாதலக்ஷணை (உ-ம்) கருப்பு நிற்கிறது சிவப்பு ஓடுகிறது

(பசு) (அசுவம்) குதிரை

விட்டு விடாதலக்ஷணை - (பாகத்தியாகலக்ஷணை)

வாச்சியார்த்தமாகிய பொருள்களில் ஒரு பாகத்தை விடுத்து மற்றொரு பாகத்தை விடாமல் உணர்த்துவது விட்டுவிடாத லக்ஷணை (உ-ம்) அவனே இவன்.

விட்டலக்ஷணை

இதனால் ஜீவ பிரம்ம ஐக்கியம் பொருந்தாது. எதனால் எனின், வாச்சியம் லட்சியம் முழுவதும் விட்டுவிட்டால் ஐக்கியம் சொல்ல பொருள் இல்லை.

விடாதலக்ஷணை

இதனால் ஜீவ பிரம்ம ஐக்கியம் பொருந்தாது. எதனால் எனின், அற்பஞ்ஞத்வத்தன்மை சர்வஞ்ஞத்வத்தன்மைகளாகிய விரோதம் இருப்பதால் ஜீவேஸ்வர ஐக்கியம் பொருந்தாது.

விட்டு விடாதலக்ஷணை

இது ஒன்றே ஜீவ பிரம்ம ஐக்கியத்திற்கு பொருத்தமானது. எதனால் எனின், காரியமாகிய ஜீவ ஈஸ்வரர்களது சப்த உபாதிகளை நீக்கிப் பார்த்தால், அதாவது, வாச்சியப் பாகங்களை விட்டு லட்சிய பாகத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் இருப்பது சைதன்யம் ஒன்றே. அவனே இவன் என்று பாகத்தியாக லட்சணையினால் ஜீவப் பிரஹ்ம ஐக்கியம் பொருந்தும்.

24. திரிபுடித்திரயம் - 3

1. ஞானத்திரிபுடி, 2. கர்மத்திரிபுடி, 3. போகத்திரிபுடி

ஞானத்திரிபுடி ஞானம், ஞாதா, நேயம்

கர்மத்திரிபுடி கர்த்தா, கர்மம், கிரியை

போகத்திரிபுடி போக்தா, போகம், போக்யை

25. வாசனைத்திரயம் - 3

1. தேகவாசனை, 2. லோகவாசனை, 3. சாஸ்திரவாசனை

26. விஷயத்திரயம் - 3

1. அபேட்சை - விருப்பு, 2. நிராபேட்சை - வெறுப்பு, 3. உபேட்சை - உதாசீனம் (விருப்பு, வெறுப்பு அற்ற)

27. அகங்கார தத்துவம் - மூன்றாக பிரிந்த குணங்களும், நாமங்களும்

1. வைகரீ, 2. தேஜஸ், 3. பௌதீகம்

வைகரீ - சத்துவ குணம் - ஈஸ்வரன்

தேஜஸ் - ரஜோ குணம் - ஜீவன்

பௌதிகம் - தமோ குணம் - ஜகத்

28. சிரவணாதி -3

1. சிரவணம், 2. மனனம், 3. நிதித்தியாசனம்

சிரவணம் - குரு முன்னிலையில் சட்விதலிங்கதாற்பரியமாக செய்கின்ற வேதாந்த சாஸ்திரார்த்தக் கிரகணரூப சித்த வியாபாரம் சிரவணம்

மனனம் - குரு முன்னிலையில் கேட்டுள்ள சாஸ்திர அர்த்தங்களைத் தானாகவாவது, தனக்கொத்த சாதுக்களோடாவது, ஏகாந்த ஏகாக்கிரமாயிருந்து, சுருதிகட்கு அவிரோதமாக, ஜீவப் பிரஹ்ம அபேத சாதக, பேத பாதக தர்க்கங்கள் அனுமான முதலிய யுக்திகளாகிய இவைகளோடு சிந்தித்தல்.

நிதித்தியாசனம் - மனனத்தால் நிச்சயித்தவண்ணம் கூடஸ்தராகிய நாமே பிரஹ்ம்ம், பிரஹ்மமேட கூடஸ்தராகிய நாமென நிரந்தரம் நேயத்தோடு தைலதாரை போல இடைவிடாமல் தியானிக்கின்ற பிரஹ்மாத்ம ஐக்கியத்துவ வடிவ சித்த விருத்திப் பிரவாகம்.

29. அகங்கார தாதாத்மியத் திரயம் - 3

1. கர்மஜம், 2. சகஜம், 3. பிராந்திஜம்

கர்மஜம் - தேகத்திற்கும், அகங்காரத்திற்கும் உள்ள சம்பந்தம்

சகஜம் - ஜீவனுக்கும், அகங்காரத்திற்கும் உள்ள சம்பந்தம்

பிராந்திஜம் - ஆத்மாவிற்கும், அகங்காரத்திற்கும் உள்ல சம்பந்தம்

30. ஏஷணாத்ரயம் - 3

1. தனம், 2. தாரம், 3. புத்திரன்

தனம் - மனிதர்களுக்கு, **தாரம்** - பறவைகளுக்கு,

புத்திரன் - மிருகங்களுக்கு

31. சுழுத்தியாதி -3

1. சுழுத்தி, 2. மூர்ச்சை, 3. சமாதி

32. கர்மத்திரயம் - 3

1. கர்மம், 2. அகர்மம், 3. விகர்மம்

கர்மம் - வேதத்தில் விதித்த கர்மம்

விகர்மம் - வேதத்திற்கு விரோதமான கர்மம்

அகர்மம் - இருவித கர்மங்களையும் செய்யாமல் இருப்பது

33. அந்தக்கரணதோஷம் - 3

1. மலம், 2. சிக்ஷேபம், 3. ஆவரணம்

மலம் - ஜன்மஜன்மாந்த்ரங்களின் பாபம்

விக்ஷேபம் - சித்தத்தின் சஞ்சலத்வம்

ஆவரணம் - சொரூபத்தின் அஞ்ஞானம் (மறைப்பு)

34. கர்த்தவ்யாதிகள் - 3

1. கர்த்தவய்ம், 2. ஞாதவ்யம், 3. பிராப்தவ்யம்

கர்த்தவ்யம் - செய்யத்தக்க ஞான சாதனம்

ஞாதவ்யம் - அறியத்தக்க ஞானத்தின் விஷயம் (பிரம்மாத்ம ஐக்கியம்)

பிராப்தவ்யம் - அடையத்தக்க ஞானத்தின் பயனாகிய மோக்ஷம்

35. இலக்ஷண தோஷத்திரயம் - 3

1. அதிவியாப்தி, 2. அவ்வியாப்தி, 3. அசம்பவம்

அதிவியாபதி - (மிகைகூறல்) இலக்ஷியத்தில் வியாபித்து, இலக்ஷணமில்லாததிலும் அந்த இலக்ஷணம் இருத்தல். அது, பசு கொம்புள்ளதெனல்.

அவ்வியாப்தி - (குறைக்கூறல்) இலக்ஷியத்தின் ஏகதேசத்தில் இலக்ஷணமிருத்தல். அது,பசு கபில நிறமுடையதெனல்.

அசம்பவம் - (முழுவதுமின்மை) இலக்ஷியத்தில் இலக்ஷணம் இல்லாதிருத்தல். அது பசு பிளவுபட்ட குளம்புகள் உடையதெனல்.

36. ஆத்மாவின் பேதத்திரயம் - 3

1. ஸஜாதீயபேதம், 2. விஜாதீயபேதம், 3. சுவகதபேதம்

ஸஜாதீய பேதம் -

தன் ஜாதியுலுள்ள பேதம், அதாவது, பிராமணனுக்கும், பிராமணனுக்கும் உள்ள பேதம்.

விஜாதீய பேதம் -

பிராமணனுக்கும் அந்நிய ஜாதிக்கும் உள்ள பேதம்.

சுவகதபேதம் - சரீரத்திலுள்ள அவயவ பேதம்

1. ஆத்மா ஏகமாய் இருத்தலால் ஸஜாதீயபேதம் இல்லை.
2. ஆத்மா சர்வான்மகமாய் இருத்தலால் விஜாதீய பேதமில்லை.
3. ஆத்மா நிரவயவமாய் (அவயவமில்லாதது) இருத்தலால் சுகவத பேதமில்லை.

37. விருத்தித்திரயம் - 3

1. ஸ்திரம் - ஜாக்கிரம், 2. அஸ்திரம் - சொப்பனம், 3. அஞ்ஞானம் - சுழுப்தி.

38. ஆணைத்திரயம் - 3 (கைவல்ய நவநீதம்)

1. ஆலமர் கடவுளாணை, 2. நம்மாணை, 3. குருபாதத்தாணை

39. பிரஸ்தானத்திரயம் - 3

1. உபநிஷத் - சுருதி, 2. பிரம்மசூத்ரம் - யுக்தி, 3. பகவத்கீதை - அனுபவம்

உபநிஷத் - அடிப்படைத் தத்துவத்தை விளக்குவது (சுருதி)

பிரம்மசூத்ரம் - தத்துவத்தை தர்க்கரீதியாக விளக்குவது (யுக்தி)

பகவத்கீதை - சாதகன் தன் வாழ்வில் இந்த தத்துவத்தை நேரடியாக உணர்வது (அனுபவம்)

40. அம்ஸத்திரயம் - 3

1. சாமான்யம், 2. விசேஷம், 3. கற்பிதவிசேஷம்

சாமான்ய அம்ஸம் -

எது பிராந்தி காலத்திலும், பிராந்தி இல்லாத காலத்திலும் அதிக காலத்திலும் (இது என்னும் தன்மை) தோன்றுகிறதோ அதனை சாமான்ய அம்ஸம் என்பர் (இது ஆதாரம்)

விசேஷஅம்ஸம் -

எதன் தோற்றத்தால் பிராந்தி நீங்குகின்றதோ, எது நியூன (அற்ப) காலத்தில் தோன்றுகிறதோ இதனை விசேஷ அம்ஸம் என்பர் (இது அதிஷ்டானம்)

கற்பிதவிசேஷ அம்ஸம் -

எது அஞ்ஞான காலத்தில் தோன்றி, ஞான காலத்தில் தோன்றுவதில்லையோ இது கற்பிதவிசேஷ அம்ஸம் இது பிராந்தி என்றும் சொல்லப்படும்.

41. ஆத்மசொரூபலட்சணம் - 3

1. சத்தி, 2. சித்து, 3. ஆனந்தம்

42. அனாத்மசொரூபலட்சணம் - 3

1. அசத்து, 2. ஜடம், 3. துக்கம்

43. உபாதிபேதத்தால் சத்துத்ரயம் - 3

1. வியாவஹாரிக சத்து, 2. ப்ராதிபாஸிக சத்து, 3. பாரமார்த்திக சத்து

வியவகாரிகசத்தை (ஜாக்ரம்)

பிரஹ்ம ஞானத்தினால் மித்தை என்று பாதிக்கப்படுவது, அல்லது சிருஷ்டி தொடங்கி விதேகமுக்தி பரியந்தம் தோன்றிக் கொண்டிருப்பது. அவித்தையும், அதன் காரியமாகிய ஆகாசாதிகளும் வியவகாரிகசத்தை.

பிராதிபாஸிகசத்தை (சொப்பனம்)

பிரஹ்ம ஞானம் இன்றி பாதமாவது, அதாவது அதிஷ்டான ஞானத்தால் நிவர்த்தியாகும். (உ-ம்) கிளிஞ்சல் வெள்ளி, ரச்சு சர்ப்பம், கானல்நீர்

பாராமார்த்திகசத்தை

பிரஹ்ம ஞானத்தினாலும் பாதமாகாமல், மூன்று காலத்தும் ஒரே படித்தாய் இருப்பது இப்படிப்பட்டது சேதனமாம்.

44. ஜீவன் - 3

1. பாரமார்த்திகன், 2. வியாவஹாரிகன், 3. பிராதிபாஸிகன்

பாரமார்த்திகன்	சாக்ஷி (கூடஸ்த) சேதனம்
வியாவஹாரிகன்	ஆபாஸத்தோடு கூடிய அந்தக்கரணரூப ஜீவன்
பிராதிபாஸிகன்	ஆபாஸத்தோடு கூடிய அந்தக்கரண்ரூப வியாவஹாரிக ஜீவனிடத்தில் சொப்பனத்தில் அத்தியஸ்தமாகும் ஜீவன்

45. கிருத்தியத் திரயம் - 3

1. இகலோகக்கிருத்தியம் (செய்வது) 2. பரலோகக் கிருத்தியம்,
3. மோக்ஷக்கிருத்தியம்

இகலோகக் கிருத்தியம்

வரைவு, உழவு, வாணிபம்

பரலோகக் கிருத்தியம்

எக்ஞும், தானம், தபசு

மோக்ஷக் கிருத்தியம்

சித்தசுத்தியின் பொருட்டு - நிஷகாமிய கர்மம்
வேதாந்த சிரவணத்தின் பொருட்டு - விவேகாதிகள்
சம்சயத்தின் பொருட்டு - சிரவணாதிகள்
பரிச்சின்ன பிராந்தியின் பொருட்டு - த்வம்பத ஆராய்ச்சி
பரோட்சத்தின் பொருட்டு - தத்பத ஆராய்ச்சி
மோக்ஷத்தின் பொருட்டு - அபரோக்ஷ ஞானம்

46. தத்துவத் திரயம் - 3

1. அவ்யக்தம், 2. மஹத்தத்துவம், 3. அஹங்காரதத்துவம்

அவ்யகதம் (தி-ம்) விதை, (தா-ம்) ப்ரஹ்மம்

மஹத்தத்துவம் (தி-ம்) ஊறினவிதை, (தா-ம்) மாயை

அஹங்காரத்தத்துவம் (தி-ம்) முளை, (தா-ம்) நான், எனது என்ற அபிமானம்

47. ஈஸ்வர, ஜீவ சொரூபம் - 3

1. அதிஷ்டானம், 2. ஆசிரியம், 3. ஆபாஸம்

	ஈஸ்வரன்
அதிஷ்டானம்	பிரம்மம்
ஆசிரியம்	மாயை
ஆபாஸம்	மாயாபிரதிபிம்பம்
	ஜீவன்
அதிஷ்டானம்	கூடஸ்தன்
ஆசிரியம்	அவித்தை
ஆபாஸம்	அவித்தியாபிரதிபிம்பம்

48. பதத் திரயம் - 3

1. தத் (அது) 2. த்வம் (நீ), 3. அஸி (ஆகிறாய்)

49. அப்பியாசத்ரயம் - 3

1. நேயம், 2. நிரந்தரம், 3. நெடுங்காலம்

50. காண்டித்திரயம் - 3

1. கர்மகாண்டி, 2. பக்திகாண்டி, 3. ஞானகாண்டி

51. கர்மங்களும், அதன் ஆசிரியமும் -3

1. சஞ்சிதகர்மம், 2. ஆகாமியம், 3. பிராரப்தம்

சஞ்சிதகர்மம்

ஆவர்ணசக்தி விசிஷ்ட அஞ்ஞானத்தை ஆசிரியத்திருக்கிறது

ஆகாமியம்

அகங்கார தேகாதிகளோடு ஆத்மாவிற்குள்ள பிராந்தியை தாதாத்மிய சம்பந்தத்தை ஆசிரியத்திருக்கிறது.

பிராரப்தம்

விட்சேபசக்தி விசிஷ்ட அஞ்ஞானத்தை ஆசிரியத்திருக்கிறது.

52. ஜீவன் முக்தனின் சாதனம் - 3

1. தத்துவஞானம், 2. மநோநாசம், 3. வாசனாக்ஷயம்

53. மனன சககாரி - 3

1. யுக்தி, 2. தர்க்கம், 3. அநுமானம்

54. உபதேச கிரமம் - 3

1. உத்தேசம், 2. இலக்கணம், 3. பரீட்சை

உத்தேசம்

விஷ்ணு, சிவன், முதலிய பெயர் மாத்திரமாகச் சொல்வது போல், ஆசிரியர், நீ பிரஹ்மம் எனச் சொல்லுதல்.

இலக்கணம்

பரவஸ்துக்குள்ள சிறந்த குறியிது என்றுரைத்தல். (களகம் பளமாங் குறியுடைய) களம் = கண்டம், கம்பளம் - கம்பிளி போலதொங்கும் அலை தாடி ஆதலால் (அலை தாடியென்னும் குறியுடையது பசு என்றாற்போல்)

பரீட்சை

லக்ஷியார்த்தம் என்னும் பரவஸ்துவில் முக்கிய லக்ஷணங்கள் உண்டா, இல்லையா என்று ஒத்து தெளிந்திடுதல்.

55. ஈஸ்வர சாமர்த்திய குணங்கள் - 3

1. கர்த்துருத்துவம், 2. அகர்த்துருத்துவம், 3. அன்னியதாகர்த்துருத்துவம்

56. ஜீவ (ஆத்ம) உபாதித் திரயங்கள் - 3

1. அவசின்னோபாதி, 2. பிரதிபிம்போபாதி, 3. அத்தியாசோபாதி

அவச்சின்னோபாதி

பிரத்தியகாத்மாவிற்குச் சுழுத்திரூப அவித்தை.

பிரதிபிம்போபாதி

அந்த அவித்தையின் காரியமான புத்தியில் அவ்வாத்மா பிரதிபிம்பித்திருப்பது.

அத்தியாசோபாதி

அந்த புத்தியிருப்பதாய சுக துக்காதிகளை அவ்வாத்மா புசிப்பது போன்றிருப்பது.

57. வேத வாக்கியத் திரயம் - 3

1. விதிவாக்கியம், 2. நிஷேதவாக்கியம், 3. சித்தார்த்த போதக வாக்கியம்

58. மாயாவிருத்தித் திரயம் - 3

1. மாயை, 2. அவித்தை, 3. பிரகிருதி

59. மாயாதிருஷ்டித் திரயம் - 3

1. உலகசம்பந்தம், 2. யுக்திசம்பந்தம், 3. சுருதிசம்பந்தம்

உலகசம்பந்தம்

இந்த மாயா கற்பிதமெல்லாம் உலக சம்பந்தமாகப் பார்க்கின் (உலக திருஷ்டியால்) ஆத்மாவைப் போல் உள்ளதாகத் தோற்றலால், நித்தியம் எனக் காண்பதாம்.

யுக்திசம்பந்தம்

ஞான அப்பியாசிகளாகிய முமூட்சுகள் யுக்தி சம்பந்தமாக விசாரிக்கின், (யுக்தி திருஷ்டியால்) சிப்பி, வெள்ளி போல சதசத் விலட்சணமாய் இருத்தலின், அநிர்வாச்சியமெனக் காண்பதாம்.

சுருதிசம்பந்தம்

ஞான ஆரூடர்களாகிய திடஞானிகள், மாயையைச் சுருதி சம்பந்தமாக விசாரிக்கின் (சுருதி திருஷ்டியால்) "ஈண்டு நாநாவானவை அற்பமுமில்லை" என்றும், முயல் கொம்பு போல முக்காலத்தும் சொரூபமில்லாத துச்சமாகவும் (ஆகாச தாமரை) போல் எனக் காண்பதாம்.

60. பாவனைத் திரயம் - 3

1. சம்சயபாவனை, 2. அசம்பாவனை, 3. விபரீதபாவனை

சம்சயபாவனை

வேதாந்தத்தில் ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் சொல்கிறதா? அல்லது அபேதம் சொல்கிறதா? என்னும் சந்தேகம்

அசம்பாவனை

ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் சத்தியமா? அல்லது அபேதம் சத்தியமா? என்னும் சந்தேகம்

விபரீதபாவனை

ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் சத்தியம் - தேகாதிப் பிரபஞ்சமும் சத்தியம் என்னும் விபரீத நிச்சயமாம்.

61. வாதம் - 3

1. வாதம், 2. ஜல்பம், 3. விதண்டை

வாதம் -	குரு சிஷ்யை சம்வாதம்
ஜல்பம் -	யுக்திப் பிரமாணங்களில் வல்லமை. பண்டிதர்களின் பிற மதத்தினைக் கண்டித்துத் தன் மதத்தைப் பூஷிக்கும் வாதம்.
விதண்டை -	மூர்க்கர்களது பிரமாண யுத்தியில்லாத வாதம் அல்லது தன் பக்ஷத்தை ஸ்தாபித்து பரபக்ஷத்தைக் கண்டித்தல்.

62. வியவஹாரசத்து - 3

1. காலசத்தை, 2. கலாசத்தை, 3. வஸ்துசத்தை

காலசத்தை - பூத, பவிஷ்ய, வர்த்தமானம்

கலாசத்தை - தூல, சூட்சும, தீர்க்கம், குறில், ரூபம்

வஸ்துசத்தை - கடம், படம் இருக்கிறது

63. விசாரத்தின் பலன் - 3

1. ஞானம் - முக்கிய பலன், 2. அதிகாரத்வம் - அவாந்தரபலன், 3. புண்ணியம்

64. மூவகை ஜாதி - 3

1. உத்தமஜாதி, 2. மத்திமஜாதி, 3. அதமஜாதி

உத்தமஜாதி

பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்தில் இகலோகபுத்தி (போகம்) பலோகபுத்தி (மோக்ஷம்) இரண்டையும் தருகின்ற மானுட சரீரங்களாம்.

மத்திமஜாதி

பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தி (ஆகார, நித்திரை, மைனுனம்) பாத்திரம் தருகின்ற பசு பக்ஷியாதி சரீரங்களாம்.

அதமஜாதி

இருவகை புத்தியையும் மறைத்திருக்கின்ற மரங் கொடி செடி முதலிய சரீரங்களாம்.

65. ஞான அப்பியாசத்தினால் நீங்கும் பிராந்திகள் - 3

1. பரிச்சின்னப்பிராந்தி, 2. பரோக்ஷப்பிராந்தி, 3. துவைதப்பிராந்தி

பரிச்சின்னப்பிராந்தி

அகம், பிரம்மம் என்னும் அப்பியாச ஞானத்தால் நீங்குகிறது

பரோக்ஷப்பிராந்தி

பிரம்மம், அகம் என்னும் அப்பியாச ஞானத்தால் நீங்குகிறது

துவைதப்பிராந்தி

சர்வம், பிரம்மம் என்னும் அப்பியாச ஞானத்தால் நீங்குகிறது

66. விருத்திகளின் லக்ஷணம் - 3

1.. அகண்டாகாரவிருத்தி = கற்பகத்தரு

2. சாட்சி விருத்தி = காமதேனு

3. விசாரஞான (விவேக) விருத்தி = சிந்தாமணி

67. தியானம் - 3

1. பிரதீகத்தியானம், 2. தியேயாநுசாரர்த்தியானம், 3. அகங்கிரகத்தியானம்

பிரதீகத்தியானம்

சாலிக்கிராமத்தை விஷ்ணு என்று பாவித்து தியானிக்கப்படுவது.

தியாயேநுசார்த்தியானம்

வைகுண்டலோகவாசியாகிய விஷ்ணுவைச் சங்கு, சக்கராதிகளோடு கூடின சதுர்புஜ மூர்த்தியாக பாவித்து தியானிப்பது சதுர்புஜமுடைய விஷ்ணுவின் தியானம் போல நான் பிரஹ்மமாகிறேன் என்னும் தியானம்.

அகங்கிரகத்தியானம்

தியேய சொரூபத்தை தன்னோடு அபேதமாகச் சிந்திப்பது

68. திருஷ்டித் திரயம் - 3

1. மித்தியாதிருஷ்டி, 2. வாததிருஷ்டி, 3. பிரபலாதிருஷ்டி

மித்தியாதிருஷ்டி

அநாத்மா பொருள் அனைத்தும் மித்தை என்பது

வாததிருஷ்டி

சமுத்திரத்திற்கு அந்நியமாக அலை, நீர்க்குமிழி, நுரையில்லாதது போல, ப்ரஹ்மத்திற்கு அன்னியமாக பிரபஞ்சம் இல்லை என்பது

பிரபலாதிருஷ்டி

எல்லாவற்றையும் சர்வாத்மகமாயொ பார்ப்பது

69. விஷய சுகத்தில் உள்ள தோஷங்கள் - 3

1. அதிருப்தித்வம், 2. துக்கமிசிரத்வம், 3. அநித்யத்வம்

70. விருத்தி - 3

1.	அபிதாவிருத்தி	= நேரடியாகச் சொல்லுதல்
2.	வியங்கியாவிருத்தி	= சூழ்நிலைக்குத் தகுந்தவாறு சொல்லுதல்
3.	லக்ஷணாவிருத்தி	= மறைமுகமாகச் சொல்லுதல்

71. சத், சித், ஆனந்தம் என்ற பதத்திற்கு வாச்சியம் இலட்சியம்

1. சத், 2. சித், 3. ஆனந்தம்

சத் என்ற பதத்திற்கு

மாயையின் ஆபேஷிக சத்தியத் தன்மையும், சேதனத்தின் நிராபக்ஷிக சத்தியத்தன்மையும் கூடி, சத் என்ற பதத்திற்கு வாச்சியம்.

கேவலம், நிராபேஷிகம் இலட்சியம்

சித் என்ற பதத்திற்கு

புத்திவிருத்திரூப ஞானமும், சுயம்பிரகாசமும் கூடி சித் என்ற பதத்திற்கு வாச்சியம்.

கேவலம் சுயம் பிரகாசம் இலட்சியம்

ஆனந்தம் என்ற பதத்திற்கு

விஷய சம்பந்த சுகாகார சாத்வீக அந்தக்கரண விருத்தியும் பரம பிரேமாஸ்பத சொரூப சுகமும் கூடி, ஆனந்தம் என்ற பதத்திற்கு வாச்சியம்.

விருத்தி பாகம் விட்டு சொரூப பாகம் இலட்சியம்

72. சகவாசத்தின் தன்மை - 2

1. அதமன், 2. மத்திமன், 3. உத்தமன்

அதமன் = காயவைத்த இரும்பு சட்டியில் விழுந்த நீர் நாசமாவது போல

மத்திமன் = தாமரை இலையில் விழுந்த நீரில் முத்துக்கள் காணப்படுவது போல

உத்தமன் = கிளிஞ்சலில் விழுந்த நீர் முத்தாகவே ஆவது போல

73. விருத்தித் திரயம் - 3

1. துவிதவிருத்தி, 2. சாட்சிவிருத்தி, 3. அகண்டாகாரவிருத்தி

துவிதவிருத்தி = தேகம் நான் எனல்

சாட்சிவிருத்தி = சாட்சி நான் எனல்

அகண்டாகாரவிருத்தி = ஏகபரம் நான் எனல்

74. ஜீவர்கள் (ஈஸ்வரனுக்கு) பண்ணுகிற மூன்று தப்பிதங்கள்

1. தேகம் தான் என்று பாவிப்பது
2. தானே கர்த்தா என்று பாவிப்பது
3. ஈஸ்வரன் வேறு, தான் வேறு என்று நினைப்பது

1வது தப்புக்குத் தண்டனை = தாபத்திரய துக்கம், ஜனன மரண துக்கம்

2வது தப்புக்குத் தண்டனை = நரக சொர்க்கங்களை அனுபவிப்பது

3வது தப்புக்குத் தண்டனை = பிரளயத்திலும் அஞ்ஞான நிவர்த்தி ஆகாது. (பிறப்பு நீங்காது)

1வது தண்டனைக்கு நிவர்த்தி சாதனம்

விவேகம், வைராக்கியம்

2வது தண்டனைக்கு நிவர்த்தி சாதனம்

ஈஸ்வரன், குரு கர்த்தா, நான் அகர்த்தா என்பது

3வது தண்டனைக்கு நிவர்த்தி சாதனம்

நானே பிரஹ்மம் என்று உறுதி பண்ணுவது

நிவர்த்தி வருவதற்கு சாதனை: சிரவணம், மனனம், நிதித்யாசனம் அல்லது சமாதி

75. கீதை கூறும் க்ஷேத்திரம் - 3

1. க்ஷதத்ராணாத் க்ஷேத்திரம், 2. க்ஷயாதி க்ஷேத்திரம்,
3. க்ஷரணாத் க்ஷேத்திரம்

திருத்தலம், மனித உடல், விளை நிலம், ஆகிய பொருள்களை க்ஷேத்திரம் என்ற சொல் கொண்டிருக்கிறது.

நிலத்தில் விதைகளைத் தூவினால் முளைக்கிறது. அதுபோல் இந்த மனித உடல் பாவமும் புண்ணியமும் ஆகியச் செயல்கள் விளைவதற்குக் காரணமாக இருக்கிறது.

எனவே, மனித உடலை விளைநிலம் என்ற பொருளில் பகவத்கீதை, க்ஷேத்திரம் என்று கூறுகிறது. மனித உடலை க்ஷேத்திரம் என்று கூறுவதற்கு சமஸ்கிருதத்தில் பின்வரும் மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன.

க்ஷதத்ராணாத் க்ஷேத்திரம்.

காயம் ஏற்பட்டால் தானே குணமாகும் இயல்புடையது என்பதினால்

க்ஷயாதி க்ஷேத்திரம்

மெல்ல மெல்ல ஐம்புலன்கள் வலிமை இழப்பது என்பதினால்

க்ஷரணாத் க்ஷேத்திரம்

முழுவதமாக இல்லாமல் போவது என்பதினால்

76. பரிச்சேத த்ரயம் - 3

1. தேசப்பரிச்சேதம், 2. காலப்பரிச்சேதம், 3. வஸ்து பரிச்சேதம்

பிரம்மம் தேசப்பரிச்சேதம், காலப் பரிச்சேதம் வஸ்து பரிச்சேதமற்றது.

பரிச்சேதம் - அந்தம் (வரையறுத்தல்)

தேசப்பரிச்சேதம்

எது எவ்விடத்தும் இன்றியாதேனும், ஓரிடத்து மட்டும் இருக்கின்றதோ, அது தேசத்தால் அந்தமுடையது. (பரிச்சேதமுடையது) உ-ம்: மண், குடம்

காலப்பரிச்சேதம்

எது உற்பத்திக்கு முன்னம், அழிவு பாட்டிற்குப் பின்னும் இல்லையோ அது காலத்தால் அந்தமுடையது. (பரிச்சேதமுடையது) உ-ம்: சரீரம்

வஸ்துபரிச்சேதம்

எந்த வஸ்து அன்னிய வஸ்துவோடு பேதமுண்டாகிறதோ அந்த வஸ்துவிற்கு அந்த வஸ்துவில் பேதமுண்டு. உ-ம்: கடம் - படம்

தேச, கால, வஸ்து பரிச்சேதமற்றது பிரஹ்மம்

77. அகங்காரம் - 3

1. பரமஅகங்காரம், 2. சூட்சும அகங்காரம், 3. தூலஅகங்காரம்

பரமஅகங்காரம்

பிரபஞ்சம் அனைத்தும் அதற்கு அதிஷ்டானமாகிய பரமாத்மாவும் அகமேயாம். அகமே நித்தியம், எம்மைத் தவிர ஓர் பாவனா பதார்த்தம் கிடையாது என எண்ணும் சிந்தனையே பரம அகங்காரம் = தன்மயதிருஷ்டி

சூட்சுமஅகங்காரம்

செந்நெல்வால் நுனியினும் சூட்சுமமாய் பிரபஞ்ச வெதரிக்தமாய் எப்போதும் நிலை பெற்றுள்ளோம் என உண்டாம் உணர்ச்சியானது சுபஅகங்காரம் - சூட்சுமஅகங்காரம் பிரபஞ்சம் மித்யா திருஷ்டி

தூலஅகங்காரம்

கை, கால் முதலிய அளவாகிய தேகத்தை இவன் நான் என்று உணரும் நிச்சய வடிவ மித்தை அபிமானமே தூலஅகங்காரத்தின் சொரூபம், ஜீவன் முக்தர்களைத்தவிர ஏனைய உலகத்தோர்க்கு எல்லாம் இருப்பனவாம். அத்தியந்தம் துராத்மாவாம். ஜனன மரணமென்னும் சம்சார விஷ விருக்ஷம் விருத்தியாவதற்குப் பிஜமாகும். வெகு பிரயத்தனப்பட்டு இதக் கெடுக்கவேண்டும்.

78. அக்ஷரங்கள் - 3

1. பிரஹ்மம், 2, ஓம்காரம், 3. மாயை

இதில், அவ்யக்தமாக இருப்பது **பிரஹ்மம்**, **மாயை**

வியக்தமாக இருப்பது **ஓம்காரம்**

நான்கின் தொகைகள்

1. அனுபந்த சதுஷ்டயம் - 4

1. சம்மந்தம், 2. விஷயம், 3. அதிகாரி, 4. பலம்

அனுபந்தம்

எது, தன்னையறிந்த பின்னர் முமூட்சுவைக் கிரந்தத்தோடு (சாஸ்திரம்) சம்பந்தப்படுத்துகிறதோ, அது அனுபந்தம் எனச் சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன.

1. சம்மந்தம்

சாஸ்திரத்திற்கும், விஷயத்திற்குமுள்ள சம்மந்தம், சாஸ்திரத்திற்கும் ஞானத்திற்கும் உள்ள சம்மந்தம். அதிகாரிக்கும் விஷயத்திற்குமுள்ள சம்பந்தம், அதிகாரிக்கும் பலத்துக்கும் உள்ள சம்மந்தம்.

2. விஷயம்

சாஸ்திரத்திற்கும் விஷயம், ஜீவப் பிரஹ்ம ஐக்கியம்.

3. அதிகாரி

மலம், விக்ஷேபம், ஆவரணம் என்னும் மூன்று தோஷங்களில், மல விக்ஷேபமின்றி, ஆவரண தோஷ மாத்திரம் உள்ளவரையும், சாதன சதுஷ்டய சகிதனாயும், யுக்தி சாமர்த்திய புத்திமானாயுமிருப்பவன், இவன் சாஸ்திர விசார மூலமாக ஆத்ம ஞானத்துக்கும், ஆத்ம ஞான மூலமாக மோக்ஷத்துக்கும் அதிகாரியாவான்.

4. பலம் - பிரயோஜனம்

இச்சாஸ்திரத்துக்கு பிரயோஜனம், துக்கநிவர்த்தி, பரமானந்தப்பிராப்தியாகிய மோக்ஷம்.

2. சம்மந்தம் - 4

1. பிரதிபாதக பிரதிபாத்ய பாவ சம்மந்தம் (சொல்லும், சொல்லப்படுவதும்)
2. ஜனக ஜன்னிய பாவ சம்பந்தம் (உண்டாவதும், உண்டாக்கப்படுவதும்)
3. கர்த்திரு கர்த்தவ்ய பாவ சம்பந்தம் (செய்வது, செய்யப்படுவது)
4. பிராபகப் பிராப்ய பாவ சம்பந்தம் (அடைவது, அடையப்படுவது)

3. சாதன சதுஷ்டயம் - 4

1. விவேகம், 2. வைராக்யம், 3. சமாதிஷட்க சம்பத்து, 4. முமூட்சுத்வம்

4. புருஷார்த்தம் - 4 மனிதன் அடைய விரும்பும் குறிக்கோள்

மனிதன் அடைய விரும்பும் பல குறிக்கோள்கள் இருக்கின்றன. குறிக்கோள்கள் அனைத்தையும் சாஸ்திரம் நான்கு தலைப்புகளில் அடக்குகிறது. அவை

1. தர்மம் (அறம்) 2. அர்த்தம் (பொருள்), 3. காமம் (இன்பம்) 4. மோட்சம் (வீடு)

தர்மம் (அறம்)

இங்கு தர்மம் என்ற சொல்லிற்குப் புண்ணியம் என்று பொருள். பொருள், இன்பம் இவ்விரண்டும் என்றும் கிடைக்க வேண்டும் என்றால், புண்ணியம் செய்திருக்க வேண்டும். அதற்காக தானம், யாகம், போன்ற நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். ஆக புண்ணியத்தைத் தேடுதல் தர்மம் என்ற புருஷார்த்தம்.

அர்த்தம் (பொருள்)

மனிதனின் முதல் குறிக்கோள், தான் வாழவேண்டும் என்பதே. வாழ வேண்டுமானால் பொருள்கள் தேவை. இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை ஆகிய பொருள் தேடுவது மனிதனின் முதல் புருஷார்த்தம்.

காமம் (இன்பம்)

முதலில் வாழத் தேவையான பொருளை நாடியபின், அவன் மனம் இன்பத்தை நாடுகிறது. சிறிது உணவு கிடைக்கப்பெற்ற பின் சுவையான உணவை நாடுவான். ஆடை கிடைத்தபின் அதில் அலங்காரத்தை நாடுகிறான். தனக்குத் தேவையான பாதுகாப்பை அடைந்ததற்குப் பிறகு இன்பத்திற்காக மட்டும் தேடப்படும் பொருள் இன்பம் என்ற புருஷார்த்தம்

மோட்சம் (வீடு)

முன்கூறிய மூன்று புருஷார்த்தங்களிலிருந்து கிடைக்கும் சுகம் நிலையற்றது என உணர்ந்து முழுமையான மன நிறைவை நாடுதல் வீடு அல்லது மோட்சம் என்ற புருஷார்த்தம். மோட்சம் என்றால் விடுபடுவது. எதிலிருந்து விடுபடுதல் என்றால், நம்மனமே நமக்கு ஏற்படுத்திய துயரத்திலிருந்து விடுபடுதல், காமம், கோபம், லோபம், பொறாமை, பயம் முதலியவற்றிலிருந்து விடுபட்டு, எதையும் சாராமல் மன நிறைவை அடைவதற்குச் செய்யும் முயற்சியே மோட்சம் என்ற புருஷார்த்தம்.

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்

தர்மம் - சாதனம், மோட்சம் - சாத்யம்
அர்த்தம் - சாதனம், காமம் - சாத்யம்,
தர்மம், அர்த்தம், காமம் இம்மூன்றும் ப்ரேயஸ் (இனிமை)
மோட்சம் - ஸ்ரேயஸ் (நன்மை)
விஷயானந்தம் - ப்ரேயஸ் - தோஷங்களுடையது
ஆத்மானந்தம் - ஸ்ரேயஸ் - தோஷமற்றது
விஷயானந்தம் - பிராரப்ததியினால் வருவது
ஆத்மானந்தம் - பிரயத்தனத்தினால் வருவது

5. பதமுக்தி சாதனம் - 4

1. சரியை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம்

6. பதமுக்தி - 4

1. சாலோகம், 2. சாமீப்யம், 3. சாரூபம், 4. சாயுஜ்யம்

7. கர்ம சதுஷ்டயம் - 4

1. உற்பாத்தியம் (உற்பத்தியுடையது) 2. ஆரப்பியம் (அடைவு),
3. சம்ஸ்காரம் (மலம்), 4. விகாரம் (மாறுதல்)

உற்பாத்தியம்

அனாதியானதால் அத்வைதம். ஆதலால் ப்ரஹ்மம் உற்பாத்யம் அற்றது.

ஆரப்பியம்

புதிதாக அடையப்படாததால் ப்ரஹ்மம் அடைவற்றது.

சம்ஸ்காரம்

அழுக்கு நீங்குவது போல ப்ரஹ்மம் மலமற்றது.தோஷமற்றது.

விகாரம்

மண் குடமாவது போல, அரிசி அன்னமாவது போல, ப்ரஹ்மம் மாறுதலற்றது.

8. காரிய சதுஷ்டயம் - 4

1. ஆரம்பம், 2. பரிணாமம், 3. விருத்தி, 4. விவர்த்தம்

ஆரம்பம் = நூல் வஸ்திரமாவது போல
பரிணாமம் = பால் தயிராவது போல
விருத்தி = வஸ்திரம் கூடாரமாவது போல
விவர்த்தம் = தங்கம் ஆபரணமாவது போல

9. யுகங்கள் - 4

1. க்ருதாயுகம், 2. த்ரேதாயுகம், 3. த்வாபரயுகம், 4. கலியுகம்

10. உபாதி பேதத்தினால் சித்து - 4

1. ஜீவன், 2. ஈஸ்வரன், 3. கூடஸ்தன், 4. பிரஹ்மம்

11. சிரவணாதி சதுஷ்டயம் - 4

1. சிரவணம், 2. மனனம், 3. நிதித்யாசனம், 4. சமாதி

12. குருசேவை - 4

1. ஆப்தம், 2. அங்கம், 3. ஸ்தானம், 4. சத்பாவம்

13. சங்கற்பாதிகள் - 4

1. சங்கற்பம் (மனம்), 2. நிச்சயம் (புத்தி),
3. அபிமானம் (அஹங்காரம்), 4. அனுசந்தானம் (சித்தம்)

14. அந்தக்கரணம் - 4

1. உள்ளம், 2. மனம், 3. புத்தி, 4. அஹங்காரம்

15. அபாவங்கள் (நித்யத்தின் லக்ஷணம்) -4

1. பிராகாபாவம், 2. பிரத்வம்சாபாவம்,
3. அன்னியோன்யாபாவம், 4. அத்தியந்தாபாவம்

பிராகாபாவம்	=	முன்னின்மை
பிரத்வம்சாபாவம்	=	பின்னின்மை
அன்னியோன்யாபாவம்	=	ஒன்றில் ஒன்றின்மை
அத்தியனந்தாபாவம்	=	முற்றிலுமின்மை

16. ஞானபலன் -4

1. சர்வதுக்கஅபாவம், 2. சர்வகாமாப்தி,
3. கிருதகிருத்யம், 4. பிராப்த பிராப்பியம்

17. சந்யாசிகள் -4

1. வெகூதகம், 2. குடீசகம், 3. அம்ஸம், 4. பரம்ஹம்சம்

18. ஞானியின் குணங்கள் -4

1. மைத்ரீ, 2. கருணை, 3. முதிதை, 4. உபேகைஷ

19. வர்ணம் -4

1. பிராம்மணன், 2. க்ஷத்திரியன், 3. வைச்சியன், 4. சூத்திரன்

20. பிறப்புகள் -4

1. சராயுஜம், 2. அண்டஜம், 3. சுவேதஜம், 4. உத்பிஜம்.

சராயுஜம்	-	பையுள் கட்டுப்பட்டிருந்து பிறப்பது
அண்டஜம்	-	முட்டையிலிருந்து பிறப்பன
சுவேதஜம்	-	வேர்வையினின்று தோன்றுவன
உத்பிஜம்	-	வித்து, வேர், கிழங்காதிகளின்றும் தோன்றுவன

21. ஈஸ்வரதேக சித்திர திருஷ்டாந்தம் - 4

1. தௌதம், 2. கடிதம், 3. வாஞ்சிதம், 4. ரஞ்சிதம்

தௌதம்	-	சுத்தமாக வெளுக்கப்பட்டது (சித்)
கடிதம்	-	கஞ்சி பூசப்பட்டது (அந்தரியாமி)
வாஞ்சிதம்	-	மையினால் கோடுகள் போடுவது (இரண்ய கர்ப்பர்)

ரஞ்சிதம் - வர்ணம் தீட்டுவது (விராட்டு)

22. ஜீவன்முக்தர் -4

1. பிரம்மவித்து, 2. பிரம்மவரன், 3. பிரம்மவரியான், 4. பிரம்மவரிஷ்டன்

23. ஜீவஅவஸ்தை - 4

1. ஜாக்ரம், 2. சொப்பனம், 3. சுழுப்தி, 4. துரியம்

24. கிருபைகள் - 4

1. இறைகிருபை, 2. குருகிருபை, 3. அந்தக்கரணகிருபை, 4. சாஸ்திரகிருபை

25. சமாதித் தடைகள் - 4

1. லயம், 2. விட்சேபம், 3. கஷாயம், 4. ரசாஸ்வாதம்

லயம் - நித்திரை, ஆலஸ்யாதிகள் சுழுத்தி அவஸ்தைக்குச் சமமான அவஸ்தை அடைவது.

விட்சேபம் - தினந்தோறும் பழகிய சம்ஸ்கார பலத்தால் அற்பகாலமேனும் ஏகாக்கிரமாய் இருந்ததற்கு கூடாமையினாலும், சேதனரூபம் அதிசூட்சுமமானமையினாலும் அச்சொரூபத்தை (பிரஹ்மானந்தத்தை) அனுபவியாமல் விஷயங்களையும் போகங்களையும் சுருதி பஹிர்முகமாக சலித்தல்.

கஷாயம் - மனதானது பாஹியாந்தரம் என்னும் இருவகையாயுள்ள தீவிர ராகத்துவேஷாதிகளால், துக்கங்களில் மூழ்கிச் சமாதியிலிருப்பது போல, ஏகாக்கிரமாயிருப்பது.

ரசாஸ்வாதம் - ரசம் - சுகம், ஆஸ்வாதம் - அனுபவம் லய, விட்சேப, கஷாயங்களின்றிச் செய்யும் தியான வலிமையால், அடையத்தக்க சவிகற்ப சமாதியில் உதயமாகின்ற ஆனந்தானுபவம் அல்லது விக்ஷேப துக்க நிவர்த்தியால் உதயமாகிய ஆனந்தானுபவம்.

26. மனதை அடக்கும் உபாயம் - 4

1. வேதாந்த வித்தை கற்பது, 2. சத்சங்கம்,
3. வாசனை ஒழிப்பது (வாசனாக்ஷயம்), 4 பிராணாயாமம்

27. வர்த்தமான பிரதியந்தம் - 4

1. விஷய ஆசக்தி, 2. பிரஞ்ஞாமந்தம், 3. குதர்க்கம், 4. விபர்யய துராக்ரகம்

28. ஸ்பரிசம் -4

1. சீதனம், 2, உஷ்ணம், 3. மிருது, 4. கடினம்

29. காரணசரீர தத்துவம் - 4

1, அவித்தை, 2. வித்தை, 3. ஜீவன், 4. ஈஸ்வரன்

30. சைதன்யங்கள் - 4

1. பிரம்மம் - மஹாகாயம், 2. கூடஸ்தன் - கடாகாயம்,
3. ஈஸ்வரன் - மேகாகாயம், 4. ஜீவன் - ஜலாகாயம்

31. பக்தர்கள் - 4

1. ஆர்த்தன், 2. அர்தார்த்தி, 3. சிஞ்ஞாசு, 4. ஞானி
ஆர்த்தன் (துன்பப்படுபவர்) = கஜேந்திரன், திரௌபதி, குந்தி, பரீக்ஷித்து
அர்தார்த்தி (செல்வத்தை விரும்புபவர்) = விபீஷணன், சுக்ரீவன், துருவன்
சிஞ்ஞாசு (ஞானத்தை விரும்புபவர்) = தர்மர், உத்தவர், முசுகுந்தர்
ஞானி (நிஷ்காமபக்தர்) = சனகாதியர், நாரதர், பிரஹ்லாதர், பிருகு, சுகர்

32. அபரவைராக்கியம் -4

1. யதமானம், 2. வியதிரேகம், 3. யேகேந்திரியம், 4. வசீகாரம்
யதமானம் = எது சாரம், எது ஆசாரம் என்று ஆராய்ச்சி
வியதிரேகம் = அந்தக்கரணத்தில் சுத்த, அசுத்த வாசனையின் தன்மை அறிவது.
யேகேந்திரியம் = அந்தக்கரணத்தை தூலமான ஆசைகளில் போகாமல் விவேகத்தால் கட்டுப்படுத்துதல்
வசீகாரம் = சூட்சுமமான சம்சாரமாகிய வாசனை வருகிறது. அந்த சூட்சுமமான வாசனையும், ஆத்ம சாக்ஷாத்காரத்தால் நீக்குவது.

33. சமாதியின் பலன் - 4

1. சஞ்சிதக் கர்மநாசம், 2. நிர்மலமார்க்கதர்மம்,
3. வாசனாக்ஷயம், 4. அபரோக்ஷஞானம்

34. அவித்தையின் காரியங்கள் - 4

1. ஆத்மபுத்தி, 2. நித்தியபுத்தி, 3. சுகபுத்தி, 4. சுசிபுத்தி
அநாத்மாவான தேகாதிகளில் - ஆத்மபுத்தி
அநித்யமான ஆகாசாதிகளில் - நித்தியபுத்தி
துக்க வடிவதனாதிகளில் - சுகபுத்தி
அசுசியான தாரபுத்திராதிகளில் - சுசிபுத்தி

35. புருடதந்திரம் - 4

1. விதி, 2. இச்சை, 3. விசுவாசம், 4. ஹடம்

36. பூமிகை நிலை - 4

1. வாக்குலயம், 2. மனோலயம், 3. புத்திலயம், 4. அகங்காரலயம்

வாக்குலயம் = அஸம்பிரக்ஞாத சமாதியின் பசு, குதிரை போன்று வாக்குநிரோதம் (1ம் பூமி)

மனோலயம் = பாலன், ஊமை முதலியோர் போன்று மனனமில்லாத் தன்மை (2ம் பூமி)

புத்திலயம் = முர்ச்சை போன்று அகங்காரமின்மை (3ம் பூமி)

அகங்காரலயம் = சுழுத்தி போன்று மஹத்துத்தன்மை இன்மை (4ம் பூமி)

37. பூஜாபாத்திரம் (பூஜைக்குரியவர்கள்) -4

1. பிரஹ்மநிஷ்டர், 2. முமூட்சு, 3. பக்தன், 4. சுவதர்ம நிஷ்டன்

38. மோக்ஷத் துவாரபாலகர்கள் - 4

1. சமம், 2. சந்தோஷம், 3. விசாரம், 4. சாதுசங்கம்

39. அவச்சேதகம் (வேறு பிரித்து அறிவிப்பது) - 4

1. விசேஷணம், 2. உபாதி, 3. உபலக்ஷணம், 4. உபரஞ்சகம்

விசேஷணம் = தனது ஆசிரியத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, அவ்வாசிரியத்தினைப் பிறபதார்த்தங்களின்றும் வேறு பிரித்து அறிவிப்பது.
உ-ம்: நீலக்குடம்.

உபாதி = தனது ஆசிரியத்தின் சொரூபத்தில் பிரவேசியாது, அவ்வாசிரியத்தினைப் பிற பதார்த்தங்களினின்றும், வேறு பிரித்து அறிவிப்பது.
உ-ம்: கடம்.
(தனது ஆசிரியமான கடாகாயத்தின் சொரூபத்தில் பிரவேசியாது ஆகாயத்தினை மற்ற மடாகாய முதலியவற்றினின்றும் வேறு பிரித்து அறிவிப்பது போல)

உபலட்சணம் = ஏதேனும் ஒரு காலத்தில் ஓர் தேசத்திலிருப்கதாய்த் தனது ஆசிரியத்தை பிறவற்றினின்றும் வேறு பிரித்தறிவிப்பது. உ-ம்: காகம் ஏதேனும் ஓர் காலத்து ஓர் தேசத்தில் இருப்பதாய்த் தனது ஆசிரியமான தேவதத்தனது வீட்டை மற்றைய வீடுகளினின்றும் வேறு பிரித்து அறிவிப்பது போல.

உபரஞ்சகம் = இயல்பாய் பெறப்பட்ட தர்மமாய்த் தனது ஆசிரியத்தை வேறு பிரித்து அறிவிப்பது
உ-ம்: நிரவயத்தன்மை, விபுத்தன்மை சேதிக்கப்படாமை முதலியன இயல்பாய் பெறப்பட்ட தர்மமாய் தம் ஆசிரியமாகிய ஆகாயத்தை வேறு பிரித்து அறிவிப்பது போல

விசேணமுடையது	=	விசிஷ்டம்
உபாதியுடையது	=	உபகிதம்
உபலக்ஷணமுடையது	=	உபலக்ஷிதம்
உபரஞ்சகமுடையது	=	உபரஞ்சிதம்

40. ஞானம் - 4

1. பொது (அறிவு) ஞானம், 2. விஞ்ஞானம், 3. அஞ்ஞானம், 4. மெய்ஞானம்

பொது (அறிவு) ஞானம்	=	எதிலும் ஆராய்ச்சி அறிவு
விஞ்ஞானம்	=	விஞ்ஞானிகளால் புறஉலகத்தில் செய்யும் நுட்ப ஆராய்ச்சி அறிவு
அஞ்ஞானம்	=	ஒரு பொருளின் உண்மையை விசாரித்து அறியாத மூட அறிவு
மெய்ஞானம்	=	அகம், புறம் இரண்டையும் ஆராய்ந்து முழு உண்மையாக இறைவனைக் காணும் மெய்யறிவு

41. வேதம் - 4

1. ரிக்வேதம், 2. யஜுர்வேதம், 3. ஸாமவேதம், 4. அதர்வனவேதம்

வேதம்	**மகாவாக்கியம்**	**உபநிஷத்**
ரிக்வேதம்	-பிரக்ஞானபிரம்மம் (லக்ஷணாவாக்கியம்)	ஐதிரேய உபநிஷத்
யஜுர்வேதம்	-அகம்பிரஹ்மாஸ்மி (அப்பியாசவாக்கியம்)	தைத்ரீயம், பிருகதாரணுயம்
ஸாமவேதம்	-தத்துவமஸி (உபதேசவாக்கியம்)	சாந்தோக்யம்
அதர்வனவேதம்	-அயம்ஆத்மபிரஹ்மம் (சாக்ஷத்காரவாக்கியம் சம்மதவாக்கியம்)	மாண்டூக்யம், முண்டகம்

42. ஆத்ம சதுஷ்டயம் - 4

1. கௌணாத்மா (முக்கியமில்லாதது), 2. மித்தையாத்மா, 3. கர்த்தாத்மா, 4. முக்கியாத்மா

43. வாக்குகள் - 4

1. பரா, 2. பச்யந்தி, 3. மத்யமா, 4. வைகரி

பரா = (பெரிய சக்தி) நாடியில் வெடித்து எழுவது. இதில் இருந்து கீழ்க்கண்டபடி மூவகையாகப் பிரிவது.

பச்யந்தி = (விருப்பம்) மூலாதாரத்திலிருந்து மணிப்பூரகச் சக்கரம் வரையில் விளங்கி, மனத்துடன் தொடர்பு கொள்வது.

மத்யமா = (ஞானம்) கண்டத்தில் (நெஞ்சில்) இருப்பது. படைப்பின் போது இதுதான் தோன்றுகிறது. ஆனால் இதற்கு வெளிப்படையான பொருள் தோன்றுவதில்லை. நெஞ்சில் இருக்கிறது: வாயில் வரவில்லை என்கிறோமே: அதுதான் இது. ஒரு பொருளைப் பற்றிய மனத்தோற்றத்தை இது அளிக்கிறது.

வைகரி = (செயல்) நாக்கில் தோன்றிப் புறவடிவம் பெற்று சொல்லின் பொருளைப் பிறர்க்கு உணர்த்துவது. அதாவது வாக்கு என்பது வெளிவராத நிலையில் உந்தியில் இருக்கிறது பிறகு அது இதயத்தில் வெளிப்படையாக மலர்ந்து நெஞ்சில் ஒலிவடிவம் பெற்று, நாக்கிலிருந்து பேச்சாக வருகிறது.

44. ஆசிரமம் - 4

1. பிரம்மச்சரியம், 2. கிரஹஸ்தம், 3. வானப்பிரஸ்தம், 4. சந்நியாசம்.

பிரம்மச்சரியம் = ஆசிரியனிடத்து ஓதி விரதம் காத்து விவாகமின்றி இருப்பது.

கிரஹஸ்தம் = இல்லறம் வழுவாது இல்லாளொடு கூடி வாழ்தல்.

வானப்பிரஸ்தம் = இல்லறம் துறந்து இல்லாளோடாயினும், தனித்தாயினும் வனத்திலிருந்து தவம் செய்தல்

சந்நியாசம் = முற்றுந்துறத்தல்

45. ஞானியின் திருஷ்டியில் பிரபஞ்சம் - 4

1. பிரம்மவித்து, 2. பிரம்மவித்வரன்,
3. பிரம்மவித்வரியான், 4. பிரம்மவித்வரிஷ்டன்

பிரம்மவித்து = சொப்பனம்
பிரம்மவித்வரன் = கானல்நீர்
பிரம்மவித்வரியான் = கயிற்றில் பாம்பு
பிரம்மவித்வரிஷ்டன் = மலடி சேய், முயல் கொம்பு

46. வேதத்தின் குணங்கள் - 4

1. நித்யத்வம், 2. அபௌருஷேயத்வம்,
3. அவிச்சின்னபரம்பராஹதத்வம், 4. அனந்தத்வம்

நித்யத்வம் = எப்பொழுதும் இருக்ககூடியது. அழிவே இல்லாதது. கால வெள்ளோட்டத்தில் பாதிப்பின்றி நித்யமாய் இருக்கும்.

அபௌருஷேயத்வம் = பிறப்பு, இறப்பு இல்லாத நிலையை அடைவதற்கான மருந்தைச் சொல்கிறது. எந்த ஒரு புருஷனாலும் இயற்றப்படாதது.

அவிச்சின்னபரம்பராஹதத்வம் = ஒருவர் சொல்லி இன்னொருவர் கேட்டு, வழிவழியே வந்து கொண்டிருக்கும் குணம். சிரமப்பட்டு சொல்லிக் கொடுக்கவும் கற்றுக் கொள்ள வேண்டிய நிலை.

அனந்தத்வம் = வேதம் மொத்தத்தையும் யாரும் கற்றுக் கொண்டுவிட முடியாது. வேதங்கள் அனந்தம்.

47. ஔவையாரின் பொன்மொழி - 4

1. இனியது, 2. கொடியது, 3. அரியது, 4. பெரியது

இனியது கேட்கின் தனி நெடுவேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

கொடியது கேட்கின் தனிநெடுவடி வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுள் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொனாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது அவர் கையில் உண்பதுதானே.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானுடராதல் அரிது
மானுடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியமால் உத்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்

புவியோ அரவினுக்கு ஒரு தலைப்பாரம்
அரவோ உமையவன் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

48. ஞானம், தியாகம், பக்தி, ஒழுக்கம்

ஞானம் - அஞ்ஞானியை மரணம் சரீரத்தை விட்டுப் பிரிக்கிறது. ஞானியை அத்மஞானம் உயிருடன் இருக்கும் போதே சரீரத்தை விட்டுப் பிரிக்கிறது. எல்லாம் ஈசன் செயல் என்று உணர்வது ஞானம்.

தியாகம் - கர்ம பலனை ஈசனுக்குச் சமர்ப்பிப்பது.
பக்தி - பந்தப்படாமலிருப்பது.
யோகம் - மனம் தளராது உறுதியுடன் இருப்பது

49. நல்வழி - 4

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன கண்
புதைந்த மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின்
கலம்போல் சார்ந்துணையும் சஞ்சலமே காண்.

50. மிகுநூல், உபசாந்தம், போதம், ஒழுக்கம்

இந்த நான்குபேர் உறவானால்
தடை வேறுண்டோ மேதினியில்
கடை காப்பாளர் போல் அவர்
மோக்ஷ வீட்டில் விடுவர் அன்றோ.

51. சரியை, கிரியை, யோகம், ஞானம்

சரியையில் - ஈசன் சடவடிவாய் நின்றான்
கிரியையில் - ஈசன் கிட்டி அறிகின்றான்
யோகத்தில் - ஈசன் தியானத்தில் (உள்ஒளி) இருந்தான்
ஞானத்தில் - ஈசன் தன் தான் ஆயினான்

52. வேமன்ன பாடல்

சித்த சுத்தி லேனி சிவபஜை ஏலரா
ஆத்ம சுத்தி லேனி ஆசாரம் ஏலரா
பாண்டு (பாத்திரம்) சுத்திலேனி பாகம் ஏலரா
விஸ்வதாபி ராமா விமலா வேமா.

53.

ஆசனி கோசி அனலமு சல்லாசி
கோசி பீகிஞ்சி கட்டி உண்டவாண்டு
எத்தவாண்டு எத்த வாண்டோ
விஸ்வதாபி ராமா வினுரா வேமா.

54. சிகரம் - 4

1. கர்மத்தின் சிகரம் = தன்னை தியாகம் செய்வது
2. பக்தியின் சிகரம் = பூரண சரணாகதி
3. யோகத்தின் சிகரம் = நிர்விகல்ப சமாதி
4. ஞானத்தின் சிகரம் = விசாரணை

ஐந்தின் தொகைகள்

1. பிரஹ்மம் - 5

1. மாயா ரஹிதம் - சுத்தப் பிரஹ்மம்
2. மாயா சஹிதம் - காரணப் பிரஹ்மம்
3. மாயா பிரதிபிம்பம் - காரியப் பிரஹ்மம்
4. உருவ குணசஹிதம் - சகுணப் பிரஹ்மம்
5. உருவ குண ரஹிதம்(அருவம் - நிர்குணப் பிரஹ்மம்

2. கர்மம் - 5

1. நித்யம், 2. நைமித்யம், 3. காமியம், 4. பிராயசித்தம், 5. நிஷித்தம்

3. பஞ்சபிராந்தி - 5

1. பேதபிராந்தி, 2. கர்த்ருத்வ போக்த்ருத்வ பிராந்தி, 3. சங்கபிராந்தி,
4. விகாரபிராந்தி, 5. சத்யத்வபிராந்தி

பேதபிராந்தி - தன்னையும் கடவுளையும் வேறாகக் காண்பது இது பிம்பப் பிரதிபிம்ப நியாயத்தால் நிவர்த்தி ஆகிறது.

கர்த்ருத்வ போக்த்ருத்வ பிராந்தி - அகம் கர்த்தா, போக்தா என்பது இது ஸ்படிக செம்பரத்தம்பூ திருஷ்டாந்தத்தால் நிவர்த்தி ஆகிறது.

சங்கபிராந்தி - நான் சித்துருவாக இருந்தும், நான் சிவமாகேன் எனல். இது கடாகாயம் மஹாகாயம் திருஷ்டாந்தத்தால் நிவர்த்தி ஆகிறது.

விகார பிராந்தி - தேகமே நான் எனல், இது ரச்சு ஸர்ப்பம் திருஷ்டாந்தத்தால் நிவர்த்தி ஆகிறது.

சத்யத்வ பிராந்தி - ஜகத் சத்யம் என்பது. இது கனக குண்டல திருஷ்டாந்தத்தால் நிவர்த்தி ஆகிறது.

4. இயமம் - 5

1. அஹிம்சை - கொல்லாமை, 2. சத்தியம் - வாய்மை,
3. அஸ்தேயம் - பிறர் பொருளை களவாமை,
4. பிரம்மச்சரியம் - புலனடக்கம்
5. அபரிக்கிரகம் - பிறர் பொருளை எதிர்பாராது இருத்தல்.

5. நியமம் - 5

1. சௌசம் - தூய்மை, 2. சந்தோஷம் - திருப்தி,
3. ஸ்வாத்யாயம் - வேதம் ஓதுதல், 4. தபசு - தவம்,
5. ஈஸ்வரப்பிரதிதானம் - இறைவனை தியானித்தல்

6. பிரஹ்மத்தில் ஜகத்து பிராந்தியால் பிரதீதியாகும் திருஷ்டாந்தங்கள் - 5

1. சுத்தியில் ரஸதம், 2. ரச்சுவின் கண் சர்ப்பம்,
3. ஸ்தாணுவில் புருஷன், 4. ஆகாயத்தில் நீலத்தன்மை,
5. கானல் நீர்

7. பஞ்சகிலேசங்கள் - 5

1. அவித்தை, 2. அஸ்மிதை, 3. ராகம் (அஸூயை), 4. த்வேஷம்,
5. அபிநிவேஷம்

அவித்தை	= ஸ்தூல சரீரமே நான் என்னும் அபிமானம் (அறியாமை)
அஸ்மிதை	= தாபத்திரயத்தால் துக்க அனுபவம்
ராகம்(அஸூயை)	= ராகாதிகளால் திரஸ்கார அனுபவம்
த்வேஷம்	= சத்புருஷர்களின் தரிசனத்தின் கண் துவேஷ புத்தியால் நிஷேதிப்பது
அபிநிவேஷம்	= ஜனங்களை சந்தோஷப்படுத்தும் பொருட்டு அதற்கு உசிதமான கர்மயத்தன துவேஷாதிகளை தரித்தல் (அல்லது) மரண பயம்.

8. கர்மத்திற்கு அதிகரணங்கள் - 5

1. தேகம், 2. இந்திரியம், 3. பிராணன், 4. அகங்காரம், 5. தேவதா சக்திகள்

9. பேதங்கள் - 5

1. ஜீவேசுவரபேதம், 2. ஜீவர்களின் பரஸ்பரபேதம், 3. ஜீவஜடபேதம்,
4. ஈசஜடபேதம், 5. ஜடஜடபேதம்

10. ஹேதாதிகள் - 5

1. ஹேது, 2. சொரூபம், 3. காரியம், 4. பலம், 5. அவதி

11. ப்ரஹ்ம பஞ்ச லக்ஷணம் - 5

1. சத்து, 2. சித்து, 3. ஆனந்தம், 4. நித்தியம், 5. அகண்டம்

12. மாயா நாம பஞ்சகம் - 5

1. தமசு, 2. மாயை, 3. மோஹம், 4. அவித்தை, 5. அநிருதம்

13. மாயா பஞ்ச லக்ஷணம் - 5

1.அசத்து, 2. ஜடம், 3. துக்கம், 4. அநித்யம், 5. கண்டம்

14. வியாக்கியான பஞ்ச லக்ஷணம் - 5

1. பதம், 2. பதார்த்தம், 3. பதசாரம் (வாக்கிய யோசனை), 4. பரீக்ஷை (வினா), 5. பரிகாரம் (விடை)

பதம் - அக்ஷர சமுதாயம் (எழுத்தின் கூட்டம்) இலக்ஷணங்கள் அமையப் பெற்ற எழுத்துக்களின் தொடர்பு

பதார்த்தம் - அப்பதத்தின் பொருளை நன்றாக விளக்கியுரைத்தல்

பதசாரம் - அப்பதத்தின் சாரத்தை (வாக்கியார்த்தத்தை) விளக்கியுரைத்தல்

பரீக்ஷை - அறிந்து கொள்வதற்காக வேண்டி ஆசங்கித்தல் (கேட்டல்)

பரிகாரம் - அதற்குத்தக்க எதிர்மொழி (விடை) அளித்தல்

15. அன்வய பஞ்ச லக்ஷணம் - 5

1. விசேஷணம் 2. விசேஷியம், 3. கர்த்தா, 4. கருமம், 5. கிரியை

விவேகமுடைய புருஷன் சோகத்தைக் கடக்கிறான் என்னும் வாக்கியத்தில்,

விசேக்ஷணம் - விவேகம்
விசேஷியம் - விவேகமுடைய புருஷன்
கர்த்தா - புருஷன்
கருமம் - சோகத்தை என்பது
கிரியை - கடக்கிறான் என்பது

16. பஞ்ச அதிகாரிகளுக்கேற்ற தெய்வங்கள் - 5

1. **பாமரனுக்கு தெய்வம்** - தேகம்
2. **கருமிக்கு தெய்வம்** - ஜீவன்
3. **பக்தனுக்கு தெய்வம்** - ஈஸ்வரன்
4. **முமுட்சுக்கு தெய்வம்** - குரு
5. **ஞானிக்கு தெய்வம்** - பிரஹ்மம்

17. குருவினிடம் சிஷ்யன் கிரகிக்கும் தன்மை - 5

1. அன்னப்பட்ட்சி, 2. முத்துச்சிப்பி, 3. தப்தாய பிண்டம், 4. கொக்கு, 5. மின்னல்

18. நிதித்யாசன சகாய யோக பஞ்சகம் - 5

1. மந்திரயோகம், 2. பரிசயோகம், 3. பாவயோகம்,
4. அபாவயோகம், 5. மகாயோகம்

19. அதிகாரிகளின் முக்தி - 5

1. கருமி = 100 பிறப்பில் முக்தி
2. முமூட்சு = 3 பிறப்பில் முக்தி
3. அப்பியாசி = 2 பிறப்பில் முக்தி
4. அனுபவி = 1 பிறப்பில் முக்தி
5. ஆருடன் = அன்றே முக்தி, பிறப்பு இல்லை

20. சாதன பஞ்சகம் - 5

1. கர்மயோகம், 2. உபாஸனை, 3. சிரவணம், 4. மனனம், 5. நிதித்தியாசனம்

21. ஜீவனுக்கு துக்கங்கள் - 5

1. **கர்ப்பாசத்தில்** = கட்டுண்டல்
2. **ஜலத்தில்** = பூரித்தல்
3. **உதராக்கினியால்** = வேகுதல்
4. **பிரசூதவாயுவால்** = முறித்துத் தள்ளுதல்
5. **நெருக்குண்டல்** =

22. பஞ்சமகாபாதகம்

1. தன்னை மறந்ததே = **கொலை**
2. சரீரம் நான் என்பது = **களவு**
3. நாமரூபத்தால் மயங்குவது = **கள் குடித்தல்**
4. இது என்னுடையது என்பது = **காமம்**
5. அனாத்மாவை நினைப்பது = **கோபம்**

23. ஜீவன் முக்தி பிரயோஜனங்கள் - 5

1. ஞானரக்ஷை, 2. தபசித்தி, 3. சர்வஜனசம்வாதம், 4. துக்கநாசம்,
5. சுகாவிற்பாவம்

24. பிரளயங்கள் - 5

1. நித்தியப்பிரளயம், 2. நைமித்திகப்பிரளயம்,
3. அவாந்தரப்பிரளயம் (தினப்பிரளயம்) 4. மகாப்பிரளயம்,
5. ஆத்தியந்திகப்பிரளயம்

25. மஹாயஞ்ஞங்கள் - 5

1. தேவயஞ்ஞும், 2. ரிஷியஞ்ஞும், 3. பிதுர்யஞ்ஞும், 4. மனுஷ்ய யஞ்ஞும், 5. பூதயஞ்ஞும்

26. அந்தக்கரணம் - 5

1. உள்ளம், 2. மனம், 3. புத்தி, 4. சித்தம், 5. அகங்காரம்

27. வாயுக்கள் - 5

1. பிராணன், 2. வியானன், 3. உதானன், 4. அபானன், 5. சமானன்

28. உபவாயுக்கள் - 5

1. நாகன், 2. கூர்மன், 3. கிரிகரன், 4. தேவதத்தன், 5. தனஞ்சயன்

29. அவஸ்தை - 5

1. ஜாக்ரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி, 4. துரியம், 5. துரியாதீதம்

30. ஞானேந்திரியங்கள் - 5

1. சுரோத்திரம் (காது), 2. த்வக்கு (தோல்), 3. சஷு(கண்), 4. சிங்குவை (வாய்), 5. சிராணம் (மூக்கு)

31. கர்மேந்திரியங்கள் - 5

1. வாக்கு, 2. பாணி, 3. பாதம், 4. உபஸ்தம், 5. பாயுரு

32. பஞ்சபூதங்கள் - 5

1. ஆகாயம், 2. வாயு, 3. அக்கினி, 4. அப்பு, 5. பிருத்வி

33. பஞ்சகோசம் - 5

1. அன்னமயகோசம், 2, பிராணமயகோசம், 3. மனோமயகோசம், 4. விஞ்ஞானமயகோசம், 5. ஆனந்தமயகோசம்

34. பஞ்சதன்மாத்திரைகள் - 5

1. சப்தம், 2. ஸ்பரிசம், 3. ரூபம், 4. ரசம், 5. கந்தம்

35. சித்தத்தின் அவஸ்தைகள் - 5

1. க்ஷிப்தம், 2. மூடம், 3. விக்ஷிப்தம், 4. ஏகாக்ரம், 5. நிருத்தம்

க்ஷிப்தம் - ரஜோகுணம் மிகைப்படும்போது அந்தக்கரணம் நிலையற்றதாகி விடுகிறது. அந்நிலையில் அருகிலுள்ள அல்லது தூரத்திலுள்ள சுக துக்க விஷயங்களில் மனம் அலைபாய்தல்

மூடம் - தமோகுணத்தின் ஆதிக்கம் அதிகமாவதால் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று மனத்தால் பிரித்துப் பார்க்க இயலாமல் போய்விடுகிறது. கோபம் சோம்பல், தூக்கம், போன்றவற்றில் மனம் நிலை பெற்று இருக்கிறது (தர்மத்தையும், வைராக்யத்தையும் இழந்த நிலையே மூடம் எனக் குறிப்பிடப்படுகிறது)

விக்ஷிப்தம் - அந்தக்கரணமானது சத்வகுணத்தின் தூண்டுதலால் சுகமாக இருப்பதில் ஆவல் கொண்டதாகவும், ரஜோகுணத்தின் தூண்டுதலால் பாவச் செயல்களைச் செய்வதில் ஆவல் கொண்டதாகவும், ரஜோகுணத்தின் தூண்டுதலால் பலவகையான முயற்சிகளில் ஆவல் கொண்டதாகவும் ஆகிறது. எந்த ஒரு தீர்மானமான முடிவிற்கு வரமுடியாமல் குழப்பமடையும் ஸ்திரமற்ற நிலை.

ஏகாக்ரம் - மனதிற்குத் தியானம் செய்யும் பொருளைத் தவிர வேறு எதிலும் கவனம் செல்லாதிருக்கும் நிலை. இந்நிலையில் சாத்வீகவிருத்தி மட்டுமே மிஞ்சி இருக்கும். மற்ற இரண்டு குணவிருத்திகளும் அமிழ்ந்து போகின்றன.

நிருத்தம் - இந்நிலையில் எந்த விருத்தியும் இருப்பதில்லை ஐந்து மனநிலைகளில் இதுவே சிறந்ததாகும். ஆத்மா முக்தி அடைவதற்கு ஏற்ற நிலையை இது தரும்.

36. மனதில் தோன்றும் விருத்திகள் - 5

1. பிரமாண விருத்தி = உண்மையான அறிவு
2. விபர்யய விருத்தி = பொய்யான அறிவு
3. விகல்ப விருத்தி = கற்பனையான அறிவு
4. நித்ரா விருத்தி = ஆழ்ந்த தூக்கம்
5. ஸ்மிருதி விருத்தி = நினைவு, சம்ஸ்காரம்

37. க்யாதி வாதம் (பிராந்தி ஞானம்) - 5

1. ஆத்மக்யாதி, 2. அக்யாதி, 3. அந்யதாக்யாதி, 4. அஸத்க்யாதி,
5. அநிர்வசநியக்யாதி

இருக்கும் ஒரு பொருளை வேறு ஒன்றாகக் கருதுவது தவறு ஆகும். இத்தகைய தவறு எப்படி ஏற்படுகின்றது என்பதை விளக்கும் முறைகள் க்யாதிவாதம் எனப்படும்.

ஜீவப்பிரஹ்ம ஐக்கிய உண்மையை அனுபவபூர்வமாக உணர்வதற்குத் தடையாக உள்ள பிராந்திகள் தர்சனபேதத்தினால் ஐவகை க்யாதிகளாக வகுக்கப்படுகின்றன.

ஆத்மக்யாதி - யோகசாரவாதி அல்லது க்ஷணிகவிஞ்ஞான வாதிகள் (பௌத்தர்கள் கூற்று)

விஞ்ஞானமயமாகிய அந்தராத்மாவின் பரிணாம ரூபமாகிய சத் வெள்ளியாகும். கண்ணில் உள்ள குற்றத்தால் வெளியில் உள்ள கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுகிறது. சத்தாக உள்ள வெள்ளியின் புறத்தோற்றப் பிராந்தியே இது. எனவே ஆத்மக்யாதி எனப்படும் சத்க்யாதி வாதத்தில் இது ஒரு வகையாகும். இது வெள்ளியன்று என்ற ஞானம் ஏற்படும் போது கிளிஞ்சலில் (வெளியில்) காணப்பட்ட வெள்ளிக்குத் தான் பாதம் உண்டாகின்றது. வெள்ளி என்ற ஞானத்திற்கு அல்ல.

அக்யாதி - சாங்கியர்கள், பிரபாகரர் (மீமாம்சம்) மதம். இது வெள்ளி என்ற ஞானத்தினால் 'இது' அதிஷ்டான கிளிஞ்சலையும், 'வெள்ளி' என்பது பிறிதோரிடத்தில் காணப்பட்ட வெள்ளியையும் குறிக்கின்றன. அதிஷ்டானத்துடன் குற்றத்தோடு கூடிய பார்வையின் காரணத்தால் இவ்வாறு காணப்படுகின்றது. இது வெள்ளியன்று என்பது அதிஷ்டானத்தில் உள்ள வெள்ளியைப் பாதிக்கின்றதே அன்றி, நினைவு பூர்வமாக முன்பு கண்ட வெள்ளி ஞானத்தை அல்ல. எனவே தவறு எதுவும் இல்லை. எல்லா ஞானமும் பிரமைரூபமாக உள்ளன என்பதால் அக்யாதி.

அந்யதாக்யாதி - (நியாய வைசேஷிக வாதம்)

கிளிஞ்சலில் 'இது' 'வெள்ளி' என்று தோன்றும் ஞானம். வெள்ளி, கிளிஞ்சல் இரண்டிற்கும் இடையே காணப்படும் விசேஷமான தன்மையால் ஏற்படுவதாகும். இந்த விசேஷத் தன்மையை (பளபளக்கும் இயல்பு) மட்டுமே இது வெள்ளியன்று என்ற ஞானம் பாதிக்கின்றதே தவிர சாதாரனமாகக் காணப்படும் 'வெள்ளி' என்ற வஸ்துவை அல்ல. சத்வெள்ளி போன்ற உருவம் இருப்பதால் தோஷபலத்தால் உண்டாகும் கிளிஞ்சலின் தோற்றமே அந்நியதாக்யாதி.

அசத்க்யாதி - (சூன்யவாதம்) இந்தக்கருத்தை கொள்கின்றது கிளிஞ்சல் என்பது சூன்யமயமானது. அதனுடன் குற்றம் நிறைந்த கண்ணின் தொடர்பு ஏற்படும் போது 'இது வெள்ளி' என்ற பிராந்தி ஞானத்தால் ஒரு பொழுதும் இல்லாத வெள்ளி (அத்யந்த அஸத்) தோன்றுவது அசத்க்யாதியாகும்.

அநிர்வசனியக்யாதி - கிளிஞ்சல் என்ற ஆதாரத்தில் குற்றம் கூடிய கண்ணுடைய தொடர்பால் உண்டாகும் 'கிளிஞ்சலின்' சாமான்ய அம்சத்தை உடைய 'இது' என்ற ஞானம், அவித்தையின் தாமஸ பரிணாமரூபத்தின் அநிர்வசனீய (விளக்க இயலாத) வெள்ளி என்பதை உற்பத்தி செய்கின்றது. இது என்ற சித்த விருத்தி விஷயமான கிளிஞ்சலுடன் அநிர்வசனீய வெள்ளியின் வேறுபாடற்ற தொடர்பைக் கிரகிப்பதால் அநிர்வசனியக்யாதி எனப்படுகின்றது.

38. சரீரப் பஞ்சகம் - 5

1. ஸ்தூல சரீரம், 2. சூக்ஷ்மசரீரம், 3. குணசரீரம், 4. கஞ்சகசரீரம்,
5. காரணசரீரம்

பஞ்ச சரீரங்கள்

1. ஸ்தூலசரீரம் -

பஞ்சபூதங்கள் 5	ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிருத்வி
ஞானேந்திரியம் 5	மெய், வாய், கண், மூக்கு, செவி,
கர்மேந்திரியம் 5	வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம்
	15 தத்துவங்கள் கூடியது ஸ்தூலசரீரம்

2. சூக்ஷ்மசரீரம் -

தன்மாத்திரை	சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
அந்தக்கரணம்	மனம், புத்தி, அகங்காரம்
சித்தம்	புரியட்டகாயம் - 8 தத்துவங்கள் கூடியது

3. குணசரீரம் - (அதிசூக்ஷ்மசரீரம்) (பரசரீரம்)

அந்தக்கரணம்	சித்தம்
வித்தியா	காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்,
தத்துவங்கள் 7	மாயை 8 தத்துவங்கள் கூடியது

பரசரீரத்துள் முக்குணமாய் நிற்றலின் குணசரீரம் என்றும் சொல்வர்.

4. கஞ்சுகசரீரம் (கஞ்சுக என்றால் சட்டை என்று பொருள்)

காலம், முதலிய ஐந்தும் (காலம், நியதி, கலை, வித்தை, அராகம்) உயிர்க்குச் சட்டை போல் அமைதலின் கஞ்சகசரீரம் என்றும் சொல்வர்.

5. காரணசரீரம்

மாயாதத்துவமே ஏனைய தத்துவங்களுக்குக் காரணமாதலின் காரணசரீரம் எனப்படும்.

I) அன்னமயகோசம்

சிவசக்தியின் அமைப்பால் சுக்கில சுரோனிதங்களால் உண்டாகிய ஓர் வடிவத்தில் பிறந்து, அன்னத்தால் வளர்ந்து பிராணன் ஒடுங்கிய பின், அன்னமாகிய பிருத்வியில் ஒடுங்குகிறது. அன்னமயகோசம். இது ஸ்தூல சரீரம்.

II) பிராணமயகோசம் (நுண்ணுடம்பு)

மனம், புத்தி, அகங்காரம் (சித்தம் ஒழிந்த அந்தக்கரணங்கள்) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (தன்மாத்திரைகள் 5) ஆகிய எட்டுத் தத்துவங்கள் கொண்ட புரியட்ட சரீரம் சூக்ஷ்மசரீரம்) கர்மேந்திரியங்கள், பிராணாதி வாயுக்கள் ஐந்தும் பிராணமயகோசம். இது கிரியாசக்தியின் காரிய ரூபம்.

III) மனோமயகோசம் (குணவுடம்பு)

மேற்கூறிய 23 தத்துவத்துக்கு அப்பால் 24 ஆவதாகிய சித்தம் குணதத்துவம் கொண்ட குணசரீரம். ஞானேந்திரியங்கள் ஐந்து மனம் இவை ஆறு தத்துவங்களும் சேர்த்து மனோமயகோசம். இது சூக்ஷ்மதேகரூபம்.

IV) விஞ்ஞானமயகோசம் (கஞ்சுகவுடம்பு)

குணதத்துவத்துக்கு மேல் உள்ள புருடன் என்பது ஒரு தனித்தத்துவமன்று) காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஐந்தும் கூடியது கஞ்சுக சரீரம். ஞானேந்திரியங்கள் புத்தி தத்துவத்தோடு சேர்ந்து விஞ்ஞானமயகோசம். இது அறிவு மயமான கர்த்தாரூபம்.

V) ஆனந்தமயகோசம் (காரணவுடம்பு)

ஆன்மா, மலமும் தானுமாய் புருட தத்துவம் இடமாகக் கொண்டு நிற்கும் இறுதி நிலை மாயை என்னும் தத்துவமாகிய காரணசரீரம். ஆத்மசொரூபானந்தத்தின் பிரதி பிம்பத்தோடு கூடிய விருத்திகளின் லயத்துக்கு இடமான காரணதேகம் எதுவோ, அது ஆனந்தமயகோசம்.

39. அனுமானப் பிரமாணத்தில் தத்துவங்கள் - 5

1. பக்ஷம், 2. சாத்யம், 3. ஹேது, 4. வ்யாப்தி, 5. திருஷ்டாந்தம்

பக்ஷம் - பர்வதம், **சாத்யம்** - நெருப்பு, **ஹேது** - புகை

வ்யாப்தி - (புகைக்கும் நெருப்புக்குமுள்ள சம்பந்த ஞானம்)

எங்கெல்லாம் புகை இருக்கிறதோ, அங்கெல்லாம் நெருப்பு இருக்கிறது என்ற அறிவு.

திருஷ்டாந்தம் - யாகசாலை மடப்பள்ளி (சமையல் அறை)

40. ஒரு வாக்கியத்தை (சப்தத்தை) நாம் கேட்டால் புதிதாக அர்த்தத்தைக் கொடுக்காது. அதற்கு நிபந்தனைகள் - 5

1. திரவியம், 2. குணம், 3. கிரியை, 4. ஜாதி, 5. சம்பந்தம்

திரவியம் - ஒரு பிரசித்தமான பொருள். நம் அனுபவத்தில் பார்க்கப்படும் பிரசித்தமான ஒரு பொருள் (உ-ம்) சூரியன் அதற்கு திரவியம் என்று பொருள்.

குணம் - வர்ணம் - நம் சப்தம் எப்பொழுது பயன்படும் என்றால், ஒரு பெயரைப் பயன்படுத்திக் கூறுவது.

கிரியை - ஒருவரைக் காட்ட வேண்டுமென்றால், செயலைக் குறித்துக் காட்டுவது (சமையல் செய்பவன்) என்று கிரியை பயன்படுத்திக் கூறுவது.

ஜாதி - சாமான்யம் - மனிதன் என்பது பொதுவக குறிப்பது ஜாதி என்பது மனிதஜாதி

சம்பந்தம் - ஒரு பொருள் வேறு ஒரு பொருளுடன் சம்பந்தப்படுவது (உ-ம்) அவர் தந்தை, அவர் மகன் என்று சம்பந்தத்தை விளக்கிச் சொல்லுதல். இந்த ஐந்தும் எந்த இடத்தில் இருக்கிறதோ அப்போது தான் சப்தப்பிரமாணத்திற்கு லக்ஷணம். அந்த சப்தம் ஒரு அறிவைக் கொடுக்கும்.

41. பிரத்தியக்ஷஞான லக்ஷணங்களின் வகைகள் - 5

1. **இந்திரியங்களால்** உண்டாகும் பாஹிய கடாதிகளின் பிரத்தியக்ஷ ஞானத்தில் பொருந்தியதாம்.

2. **மஹாவாக்கியங்களால்** உண்டாகும் பிரஹ்மத்தின் பிரத்தியக்ஷ ஞானத்தில் பொருந்தியதாம்.

3. **ஆந்திரத்தில்** பாஹிய நிமித்தங்களின்றி உள்ளேயே உண்டாகும் சுக, துக்கங்களின் பிரத்தியக்ஷ ஞானத்தால் பொருந்தியதாம்.

4. **மாயையின் விருத்தியாகிய** ஈஸ்வர ஞானத்தில் பொருந்தியதாம்.

5. **அவித்தியா விருத்தியாகிய** ரச்சு சர்ப்பாதிகளின் ஞானத்தில் பொருந்தியதாம்.

42. பஞ்சக்கிருத்தியங்கள் பஞ்சமூர்த்திகள் - 5

1. சிருஷ்டி, 2. ஸ்திதி, 3. சம்காரம், 4. திரோபவம், 5. அனுக்கிரஹம்

சிருஷ்டி (படைத்தல்)	- பிரம்மா
ஸ்திதி (காத்தல்)	- விஷ்ணு
சம்காரம் (அழித்தல்)	- ருத்திரன்
திரோபவம் (மறைத்தல்)	- மகேஸ்வரன்
அனுக்கிரஹம் (அருளுதல்)	- சதாசிவன்

43. ஞானி, முமூட்சு, பக்தன், கருமி, பாமரன் இவர்களின் நிலைமையின் தன்மை

.1. ஞானி, 2. முமூட்சு, 3. பக்தன், 4. கருமி, 5. பாமரன்

சமுத்திரத்திலிருந்து கரையேறியவனைப் போல **ஞானி**.

கப்பலில் நிர்பயமாய் போகிறவனைப் போல குருவுக்குப் பக்கத்திலிருக்கும் **முமூட்சு**.

படகில் போகிறவனைப் போல **பக்தன்**.

கவலையுடன் தெப்பக்கட்டையைப் பிடித்துக் கொண்டு கையால் நீந்துகிறவனைப் போல **கருமி**.

கைநீச்சலுடன் கடலில் போகிறவனைப் போல **பாமரன்**.

44. ஈஸ்வர பஞ்சக்கிருத்திய திருஷ்டாந்தம், தாஷ்டாந்தம்

	உபமானம்	உபமேயம்
	திருஷ்டாந்தம்	தாஷ்டாந்தம்
	சூரியன்	**ஈஸ்வரன்**
சிருஷ்டி -	மழைபெய்து அதில் பிரதிபிம்பித்தல்	புத்தியில் ஈஸ்வரன் பிரதிபிம்பித்தல்
ஸ்திதி -	பனிக்கிரணத்தால் காத்தல்	நியமசக்தியால் காத்தல்
சம்ஹாரம் -	உஷ்ணகிரணத்தால் அழித்தல்	உருத்திர வடிவத்தால் அழித்தல்
திரோபவம் -	மேக்கிரணத்தால் மறைத்தல்	ஆவர்ணசக்தியால் மறைத்தல்
அனுக்கிரஹம் -	தன்னோடு ஐக்கியமாகச் செய்து கொள்ளல்	ஜீவனை தன்னோடு ஐக்கியமாகச் செய்து கொள்ளல்

45. சிவதத்துவம் - 5 (இறைவனின் ஐந்து முகங்கள்)

1. ஈசானம், 2. தத்புருடம், 3. அகோரம், 4. வாமதேவம், 5. சத்யோஜாதம்

ஆறின் தொகைகள்

1. ஈசுவர கல்யாண குணங்கள் - 6

1. சர்வக்ஞத்வம், 2. சர்வேஸ்வரத்வம், 3. சர்வ அந்தர்யாமித்யம், 4. சர்வசக்தித்வம், 5. சர்வகாரணத்வம், 6. சர்வநியந்தரத்வம்

2. ஷட்சமயம் - 6

1. கணாதிபத்யம், 2. கௌமாரம், 3. சௌரம், 4. சாக்தம், 5. வைஷ்ணவம், 6. சைவம்

3. (ஜீவன்) அவஸ்தை - 6

1. சிசு, 2. பால்யம், 3. யௌவனம், 4. கௌமாரம், 5. தாருண்யம், 6. வார்த்தைக்யம்

4. ஷடூர்மிகள் - 6

1. ஜரை, 2. மரணம், 3. பசி, 4. தாகம், 5. சோகம், 6. மோஹம்

5. ஷட்வர்கம் - 6

1. காமம், 2. குரோதம், 3. லோபம், 4. மதம், 5. மோகம், 6. மாத்சர்யம்

6. ஷட்பாவ விகாரம் - 6

1. இருத்தல், 2. பிறத்தல், 3. வளர்தல், 4. பருத்தல், 5. தேய்தல், 6. மறைதல்

7. ஷட்சாஸ்திரம் (தர்சனம்) - 6

		ஆசிரியர்
1. **பூர்வமீமாம்ஸை**	-	ஜைமினி
2. **உத்தரமீமாம்ஸை**	-	வேதவியாசர்
3. **நியாயம்**	-	கௌதமர்
4. **வைசேஷிகம்**	-	கணாதர்
5. **சாங்கியம்**	-	கபிலர்
6. **யோகம்**	-	பதஞ்சலி

8. சமாதிஷட்க சம்பத்து - 6

1. சமம், 2. தமம் 3. விடல், 4. சகித்தல், 5. சமாதானம், 6. சிரத்தை

சமம்	=	அந்தக்கரண நிக்கிரகம்
தமம்	=	புலனடக்கம்
விடல்	=	நீக்கப்பட்ட விஷயங்களும், அவற்றைப் பற்றிய சகல கர்மங்களையும் வாந்தாசன (கக்கிய சோறு) போலப் பற்றற விடுதல்.
சகித்தல்	=	பிராரப்த கர்மத்தால் வரும் சீதோஷ்ண, பசி, தாக, சுக, துக்காதி இருமைகளை சமபுத்தியாக அனுபவிப்பது
சமாதானம்	=	பிரஹ்மமாகிய லக்ஷியத்தில் சித்தம் ஏகாக்கிரமாய் இருப்பது
சிரத்தை	=	சுருதி, குரு வாக்கியங்களில் உண்மையாயுள்ள விசுவாசம் (நம்பிக்கை)

9. ஞானமுக்தனின் குணங்களின் தன்மை - 6

1. அசிங்குவத்தன்மை, 2. நபும்ஸகத்வம், 3. பங்குத்வம், 4. அந்தத்துவம், 5. பதிரத்வம், 6. முக்தத்துவம்

அசிங்குவத்தன்மை	=	கவவிஷயத்தில் விருப்பமில்லாமை
நபும்ஸகத்வம்	=	குமரி, தருணி (16 வயதுள்ளவள்) விருத்தை என்னும் ஸ்திரீகளிடத்தில் சமத்துவம் (விகாரமில்லாமை)
பங்குத்வம் ((முடம்)	=	ஒரு தினத்தில் ஒரு யோசனை தூரத்திற்கு அதிகமாய் நடவாதிருத்தல்
அந்தத்துவம் (குருடு)	=	அளவிற்கு அதிகமாக பார்வையை விடாதிருத்தல்
பதிரத்வம் (செவிடு)	=	வீண் வார்த்தைகளைக் கேளாதிருத்தல்
முக்தத்துவம் (அறியாமை)	=	வியவகாரம் இல்லாதிருத்தல்

10. ஷட்சமாதிகள் - 6

1. பாஹிய சமாதி 3, 2. ஆந்தர சமாதி 3,

1. (நாமரூபங்களை அகற்றுதல்)
   பாஹிய திருசியாநுவித்த சவிகற்ப சமாதி
2. (சச்சிதானந்த சொரூபமே என்பது)
   பாஹிய சத்தாநுவித்த சவிகற்ப சமாதி
3. (நிஸ்தரங்க சமுத்திரம் போல் இருப்பது)
   பாஹிய நிர்விகற்பம்

4. (காம க்ரோதங்களை நீக்குவது)
   ஆந்தர திருசியாநுவித்தம்
5. (நானே சச்சிதானந்தம் என்பது)
   ஆந்தர சத்தானுவித்தம்
6. (நிவாஸ்தல தீபம் போல இருப்பது)
   ஆந்தர நிர்விற்கற்பம்

11. சுவாசிரிய சுவ விஷயங்கள் - 6

சுவாசிரிய சுவ விஷயம் என்பது, மாயை (அஞ்ஞானம்) பிரஹ்மத்தினை ஆசிரியத்துக் கொண்டு பிரஹ்மத்தினை ஜீவர்கள் உணரவொட்டாமல் மறைத்தலாம். இது எதைப் போல என்றால்,

1. பாசி = தண்ணீரை ஆசிரயித்துக்கொண்டு தண்ணீரையே மறைப்பது போல்
2. புகை = நெருப்பை ஆசிரயித்துக்கொண்டு நெருப்பையே மறைப்பது போல்
3. மேகம் = சூரியனை ஆசிரயித்துக்கொண்டு சூரியனையே மறைப்பது போல்
4. கண்படலம் = கண்ணை ஆசிரயித்துக்கொண்டு கண்ணையே மறைப்பது போல்
5. பாம்புக்கட்டை= பாம்பை ஆசிரயித்துக்கொண்டு பாம்பையே மறைப்பது போல்
6. கருப்பை = கருவை ஆசிரயித்துக்கொண்டு கருவையே மறைப்பது போலவும்

12. வேதாங்கம் - 6

1. சிக்ஷை, 2. நிருத்தம், 3. ஜோதிடம், 4. ஆயுர்வேதம், 5. கல்பனா, 6. சந்தசு

13. அத்தியாசத்திற்கு சாமகிரியைகள்

தான் இல்லாத இடத்தில் தான் தோன்றுவதற்கு காரணங்கள்

1. **சஜாதீய வஸ்து ஞான ஜன்னிய சம்ஸ்காரம்**
   (முன்னால் சத்திய வஸ்துவைப் பார்த்த ஞாபகம்)
2. **விசேஷ அஞ்ஞான வடிவம்** (அதிகமான அறியாமை)
3. **சாமான்ய ஞானம்** (இது இது என்னும் சாமானிய ஞான ரூபம்)
4. **பிரமாதா தோஷம்** (அந்தக்கரணத்தில் ஆசை, பயம், முதலிய தோஷம்)
5. **பிரமாண தோஷம்** (கண்ணில் பித்தக் காமாலை, கண் பொறை போன்ற தோஷம்)
6. **பிரமேய தோஷம்** (பிரமாணத்தால் அறிவதற்கு யோக்கிய அதிஷ்டானம்)

(ரச்சுவில் சர்ப்பம், சிப்பியல் வெள்ளி போன்ற வஸ்துவின் தோஷம்)

14. அநாதிகள் - 6

1. அஞ்ஞானம் (மாயை), 2. ஜிவன், 3. ஈஸ்வரன், 4. ஜீவாஈஸ்வர சம்பந்தம், 5. ஜீவாஈஸ்வரபேதம், 6. பிரஹ்மம்

15. ஸ்தூல சரீர தத்துவம் - 6

1. **சர்மம்** = தோல்
2. **உதிரம்** = ரத்தம்
3. **மாமிசம்** = சதை
4. **சனாயு** = நரம்பு
5. **ஹஸ்தி** = எலும்பு
6. **மஜ்ஜை** = கொழுப்பு (மூளை)

16. பிராந்தி (பிரமம்) - 6

1. குலம், 2. கோத்திரம், 3. ஜாதி, 4. வருணம், 5. ஆசிரமம்,
6. ரூபம் அல்லது நாமம். பிரஹ்மம்

17. ஷட்ஆதாரம் - ஆறு ஆதாரங்களும் அதன் விபரமும்

1. மூலாதாரம், 2. சுவாதிஷ்டானம், 3. மணிப்பூரகம், 4. அனாகதம்,
5. விசுக்தி, 6. ஆக்ஞை

1. மூலாதாரம்

ஸ்தானம் - யோனி, வடிவம் - முக்கோணம்
நிறம் - சிவப்பு, மூர்த்தி - கணேசன்
சக்தி - வல்லபை

2. சுவாதிஷ்டானம்

ஸ்தானம் - மூத்திராசயம், வடிவம் - நாற்கோணம்
நிறம் - மஞ்சள் (பொன்மை) மூர்த்தி - பிரஹ்மா
சக்தி - சரஸ்வதி

3. மணிப்பூரகம்

ஸ்தானம் - நாபிக்கமலம், வடிவம் - அர்த்தசந்திரன்
நிறம் - நீலம் (மேகம்) மூர்த்தி - விஷ்ணு
சக்தி - லக்ஷிமி

4. அனாகதம்

ஸ்தானம் - இருதயகமலம், வடிவம் - முக்கோணம்
நிறம் - சிந்தூரம், மூர்த்தி - ருத்திரன்
சக்தி - ருத்திராணி

5. விசுத்தி

ஸ்தானம் - கண்டம், வடிவம் - அறுகோணம்
நிறம் - புகை, மூர்த்தி - மகேசுவரன்
சக்தி - மகேசுவரி

6. ஆக்ஞை

ஸ்தானம் - புருவநடு, வடிவம் - வட்டம்
நிறம் - வெண்மை, மூர்த்தி - சதாசிவன்
சக்தி - மனோண்மணி

18. சூத்திரம் - 6

1. ஜைமினீயம், 2. ஆசுவலாயனம் 3. ஆபஸ்தம்பம், 4. போதாயனம்
5. காத்தியாயனம், 6. வைகானசீயம்

19. ஷட்விதத்தில் பக்தி - 6

1. **சாந்தம்** = பீஷ்மர்
2. **சக்யம்** = அருஜுனன்
3. **தாஸ்யம்** = அனுமான்
4. **வாத்ஸல்யம்** = கடவுளை குழந்தையாக எண்ணி ஒன்றிப்போதல்
5. **கோபிபாவம்** = ராதே, கோபிகள்
6. **மாதுர்யம்** = நாயகி, நாயக பாவனை ஆண்டாள் மீரா

20. சூத்ரம் (சொல்லவேண்டிய கருத்துக்களை மிகமிக சுருக்கமாக கூறுதல்) (6 விதத்தாலும் சுருக்கமாக கூறுதல்)

1. அல்பாக்ஷரம், 2. அஸந்திக்தம், 3. ஸாரவத், 4. விஷவதோமுகம்,
5. அஸ்தோபம், 6. அனவத்யம்

1. **அல்பாக்ஷரம்** = எவ்வளவு குறைவாக எழுதமுடியுமோ, அவ்வளவு குறைவாக எழுதுதல்
2. **அஸந்திக்தம்** = சந்தேகமில்லாமல் குறைவாகக் கூற வேண்டும்
3. **ஸாரவத்** = (ஸாரம்) அர்த்தம் இருக்க வேண்டும் பயன் இருக்க வேண்டும்
4. **விஷ்வதோமுகம்**= அதிகமான கருத்துக்கள் ஸாரமாகவும், விஸ்தாரமாகவும் இருக்க வேண்டும்.
5. **அஸ்தோபம்** = பயனற்ற சொற்கள் இருக்கக்கூடாது
6. **அனவத்யம்** = தவறான கருத்து கூறக் கூடாது

இந்த நியதிக்கு உட்பட்டு எழுதுவது தான் சூத்ரம்

21. ஷட்விதலிங்கம் (பிரம்மத்தைப் பற்றி 6 வித அடையாளங்களின் தாத்பர்யத்தோடு குரு உபதேசித்தல்)

1. உபகர்மம், உபசம்ஹாரம், 2. அப்பியாசம், 3. அபூர்வதா,
4. பலம், 5. அர்தத்வாதம், 6. உப்பத்தி

1. **உபகர்மம், உபசம்ஹாரம்** - 2ம் ஒரே விதலிங்கம் இந்த ஜகத்து சிருஷ்டிக்குப் பின்னும், சத்து மாத்திரமாகவே இருந்தது. சிருஷ்டிக்கு முன்னும் சத்து மாத்திரமாகவே இருந்தது.

2. **அப்பியாசம்** - மீண்டும் மீண்டும் பல திருஷ்டாந்தங்களின் பிரம்ம சிந்தனை பண்ணுவது

3. **அபூர்வதா** - பிரம்மம் பிரமாணத்திற்கு ஆதீதம். 8 பிரமாணங்களினாலும் எட்டாவது என்பதாம்.

4. **பலம்** - துக்க நிவர்த்தி, சுகப்பிராப்தி

5. **அர்த்தவாதம்** - பரமாத்மாவிற்குப் பஞ்ச கிருத்தியங்கள் உபசாரமாகச் சொல்வது.

6. **உபபத்தி** - காரியமான கடம் காரணமான மண்ணுக்கு வேறு இல்லை என்பது போல சொல்வது.

22. ஐஸ்வர்யாதி - 6

1. ஞானம், 2. வைராக்யம், 3. ஸ்ரீ 4. கீர்த்தி, 5. வீரியம், 6. ஐஸ்வர்யம்

(ஆகிய - ஆறும் மேலாம் இயல்புகள் ஒருமித்து இருந்தவை - பகத்தை) பகத்தை உடையவன் பகவான்.

23. ஜீவனின் மூன்று அவஸ்தைகளின் விபரம்

1. ஸ்தானம், 2. வாக்கு, 3. போகம், 4. சக்தி, 5. குணம், 6. நாமம்

ஜீவனது ஜாக்கிராவஸ்தையின்		ஜீவனின் சொப்பனஅவஸ்தையின்	
ஸ்தானம்	= நேத்திரம்	ஸ்தானம்	= கண்டம்
வாக்கு	= வைகரி	வாக்கு	= மத்திமை
போகம்	= ஸ்தூலம்	போகம்	= சூக்ஷ்மம் (வாசனாமயம்)
சக்தி	= கிரியை	சக்தி	= ஞானம்
குணம்	= இராசதம்	குணம்	= சத்துவம்
நாமம்	= ஜாக்கிர அபிமானத்தால் விசுவன் என்பது	நாமம்	= சொப்பன அபிமானத்தால் தைஜஸன் என்பது

ஜீவனின் சுழுத்தி அவஸ்தையின்

ஸ்தானம் = இருதயம், **வாக்கு** = பைசந்தி, **போகம்** = ஆனந்தம்,
சக்தி = திரவியம், **குணம்** = தாமதம்,
நாமம் = சுழுத்தி அபிமானத்தால் பிராஞ்ஞன் என்பது

ஏழின் தொகைகள்

1. சப்த ப்ரம்மங்கள் - 7

1. **பிரம்மன்** - சிருஷ்டி
2. **விஷ்ணு** - ஸ்திதி
3. **உருத்திரன்** - சம்ஹாரம்
4. **பிரணவம்** - மந்திரம்
5. **வேதம்** - சாஸ்திரம்
6. **பிராஹ்மணன்** - வர்ணம்
7. **பசு** - மிருகம்

2. சேதனங்கள் - 7

1. சுத்தசேதனம், 2. ஈஸ்வரசேதனம், 3. ஜீவசேதனம்,
4. பிரமாதாசேதனம் 5. பிரமாண சேதனம், 6. பிரமேய சேதனம்,
7. பிரமிதிசேதனம்

3. பிறப்புகள் - 7

1. சுரர், 2. நரர், 3. விலங்கு, 4. பறவை, 5. ஊர்வன, 6. நீர்வாழ்வன,
7. தாவரஜங்கமம்

4. புத்திகள் - 7

1. சராபுத்தி - மூங்கில்
2. சர்மபுத்தி - தோல்
3. சிலாபுத்தி - கல்
4. தாருபுத்தி - மரம்
5. தைலபுத்தி - எண்ணெய்
6. மிருத்யுபுத்தி - மண்
7. கருணாபுத்தி - பாம்பிராணி

5. ஈஸ்வர சப்த உபாதிகள் - 7

1. சர்வேஸ்வரத்வம், 2. சர்வக்ஞத்வம், 3. சர்வ்வியாபக்த்வம்,
4. சர்வகாரணத்வம், 5. சர்வசிருஷ்டித்வம், 6. சர்வஸ்திதித்வம்
7. சர்வ சம்ஹாரத்வம்

6. ஜீவ சப்த உபாதிகள் - 7

1. ஸ்தூலசரீரம், 2. இந்திரியம் 3. பிராணன், 4; மனம், 5. புத்தி, 6. சித்தம், 7. அஹங்காரம்

7. ஞானசப்தபூமி - 7 (சித்தத்தின் நிலை)

1.சுபேட்சை, 2. விசாரனை, 3. தனுமானசி, 4. சத்துவாபத்தி, 5. அசம்சத்தி, 6. பதார்த்தபாவணை, 7. துரியம்

சுயேட்சை = நான்கு சாதனங்களைக் கொண்டு மோக்ஷமடைவதில் தீவிர விருப்பம்.
விசாரணை = சத்குருவை அறிந்து (அடைந்து) சிரவண மனனங்கள் செய்வது
தனுமானசி = (மனம் மெலிவு அடைவது) = வேறு நிணைப்பு இல்லாமல் பிரம்மத்தில் நிலைத்தல்
சத்துவாபத்தி = பிரம்ம சாக்ஷாத்காரம் பெறுவது
அசம்சக்தி = மனதைக்கட்டுப்படுத்தி சமாதியில் நிலைத்தல் குளத்தில் ஜலத்துக்கடியில் மரக்கட்டையை வைத்தாலும் அது தானாகவே மேலே வருவது போல தானாகவே சமாதி களைந்து மனம் வெளி உலகை நோக்கி வருவது
பதார்த்தபாவனை = தண்ணீருக்கடியில் போடப்பட்ட கல் தானாக வெளியே வராமல் போனாலும், ஜலத்தில் மூழ்கி பிரயத்தனம் பண்ணி கல்லை வெளியே எடுத்து வரலாம். மனதை உள்ளே பிரமத்தில் செலுத்தி நிலைக்கச்செய்வது.
துரியம் = சமாதி கலையாமல் உப்புத் தண்ணீரில் கரைவது போல மனம் பிரஹ்ம சொரூபத்தில் லயிப்பது

ஞானியின் மனம், உணர்வு

5ம் பூமியில் = தண்ணீரில் கட்டை மேலே மிதப்பது போல மனது தானாகவே வெளியே வரும் (வரன்)
6ம் பூமியில் = தண்ணீரில் கல், தண்ணீரில் அடியில் இருக்கும். அது போல தண்ணீரில் இருக்கும் கல்லை எடுக்க வேண்டுமானால் ஆழமாகப் போய்தான் எடுக்க முடியும். அப்படி மிக்க பிரயத்தனம் பண்ணித்தான் ஞானியின் மனம் வெளிப்படும் (வரியான்)
7ம் பூமியில் = தண்ணீரில் உப்பு போலவும், பாலும், நீரும் போலவும் ஒன்றாக கலந்து விடும். பிரயத்தனம் பண்ணினாலும் மனது வெளியில் வராது. (வரிஷ்டன்)

8. அஞ்ஞானசப்த பூமிகள் - 7

1. பீஜஜாக்கிரம் 2. ஜாக்கிரம், 3. மகாஜாக்கிரம், 4. ஜாக்கிர சொப்பனம், 5. சொப்பனம், 6. சொப்பனஜாக்கிரம், 7. சுழுத்தி

பீஜஜாக்கிரம் = ஜாக்கிரத்தில் ஆதியில் மாயா விசிஷ்ட பிரஹ்மத்தில் (ஆத்மாவினின்று) எழுகின்ற சிதாபாஸ சேதனமாம்.
ஜாக்கிரம் = பீஜஜாக்கிரம் என்பது அவ்வறிவின் கண்ணே முன்னில்லாத அகம் மமதைகள் அங்குரம் போல சூக்ஷ்மமாக எழுவதாம்.
மகாஜாக்கிரம் = ஜனனங்கள் தோறும் அந்த அகம் மமதைகள் உண்டாகித் திட்தரமாய் இருப்பதாம்.
ஜாக்கிர சொப்பனம் = உற்பத்தி நாசமுடைய அந்தக்கரணத்தைக் கொண்டு ஜாக்கிரத்தின் கண் ஏதாவதொன்று முன்னர் தானறிந்தேனும், அறியாததேனும் அதன் மயமாய் மனோராஜ்யம் செய்வதாம்.
சொப்பனம் = நித்திரையில் உளதாகும் சொப்பனத்தில் அற்பகாலத்தில் அநேக கால வியாபாரூபமான மனோ ராஜ்யம் செய்து பின் நித்திரை காலத்தில் அனுபவித்ததை நினைப்பதாம்.
சொப்பனஜாக்கிரம் = பூர்வம் சொப்பனம் கண்டு மறந்ததை மீண்டும் திடமான மரண பயத்தால் சரீரத்தை இரட்சிப்பதில் உண்டாகும் ஆக்கிரத்தால் நிமிஷகாலம் வெகுகாலம் நிலையாக பாவிப்பதாம் அல்லது சொப்பனம் ஜாக்கிரம் போல ஜாக்கிரத்தில் தோன்றுவதாம்.
சுழுத்தி = ஜீவனுடைய கர்ம பலபோக அவஸ்தையாகிய மேற்கூறியுள்ள ஆறு பூமியையும் விட்டொழித்து மேல் அனுபவிக்கத்தக்க கர்மவாசனைகள் நெருங்கியிருக்கும் அஞ்ஞான இருள் மூடச் ஜடமாயிருப்பதாம்.

9. ஜீவ (ஆத்ம) சப்த அவஸ்தைகள் - 7

1. அஞ்ஞானம், 2. ஆவரணம், 3. விட்சேபம், 4. பரோட்சஞானம்,
5. அபரோட்சஞானம், 6. துக்கநிவர்த்தி, 7. தடையற்ற ஆனந்தம்

அஞ்ஞானம் = கற்பித விசேஷ சிதாபாச ஜீவன், சுருதி விசாரத்திற்கு முன்னர் தனது யதார்த்த (பிரத்யக்காத்ம சுயம்பிரகாச) நிலையை அறியாதிருப்பது
ஆவரணம் = பிரம்மத்தைப் பற்றிய பிரசங்கம் நேர்ந்தபோது பிரம்மமில்லை. இருந்தால் விளங்க வேண்டுமே, எனவே அசத்வாபாதகம், அபநாபாதகம் என்னும் இருவித உட்பிரிவையுடையது.
விட்சேபம் = நான் மனுஷ்யன், நான் கருத்துருத்வாதிகளையுடைய ஜீவன் எனத் தன்னைக் காண்டல்.
பரோட்சஞானம் = புராண வாக்கியத்தால் சுவர்க்காதிகளுண்டு என்று அறிவது போல குருவினால் உபதேசிக்கப்பட்ட சத்திய ஞானானந்தம் பிரஹ்மம் என்னும் அவாந்தர வாக்கியத்தால் பிரஹ்மம் உண்டு என்று அறிதலே - அசத்தாவரண நிவர்த்தகமானது.
அபரோட்சஞானம் = நீயே பிரஹ்மம் என்ற மகாவாக்கியத்தால் தானே பிரஹ்மம் என்று அறிவதே - அபாநாவரண நிவர்த்தகமானது
துக்கநிவர்த்தி = தான் கர்த்தா போக்தா அல்ல என்று துக்கம் போனது
தடையற்ற ஆனந்தம் = செய்யத்தக்கவையனைத்தும் செய்து அடையத்தக் கவையனைத்தும் அடைந்தன என்னும் சந்தோஷம்

ஜீவனுக்கு ஏழு அவஸ்தைகள் உண்டு என்பதற்கு திருஷ்டாந்தம்

அஞ்ஞானம் = தச (பத்து) புருஷர்கள் ஒன்றாகக் கூடி ஓர் ஆற்றைக் கடந்து, கரையேறித் தம்மோடு வந்த யாவரும் கரையேறினார்களா? இல்லையா? என எண்ணிப்பார்க்க வேண்டும் என முயற்சித்தவனே பத்தாமவன். அவன் தன்னை விடுத்து, மற்ற ஒன்பது பேர்களையும் எண்ணிய தானே பத்தாமவன் என்று அறியாமல் மயங்கிய மயக்கம்.

ஆவரணம் = பத்தாமவன் இல்லை. இருந்தால் எண்ணியதில் இருக்க வேண்டும் எனல்.

விட்சேபம் = பத்தாமவன் ஆற்றோடே போய் விட்டான் எனக் கலக்கமுற்று அழுதல்.

பரோக்ஷ ஞானம் = அழுவதைப் பார்த்துக் கொண்டு மார்க்கத்தில் வந்த ஆப்தன். பத்தாமவன் இருக்கின்றான் என்ற வார்த்தையை நம்புதல்.

அபரோக்ஷ ஞானம் = ஒன்பது பேர்களையும் கைநீட்டி எண்ணிய நீயே பத்தாமவன் என்று அறிவிக்க, அதை அறிந்ததே.

துக்கநிவர்த்தி = பத்தாமவன் போய்விட்டான் என்றழுத அழுகை நீங்கியது.

தடையற்ற ஆனந்தம் = பத்தாமவனே தான் எனக் கண்ட சந்தோஷம்.

தாஷ்டாந்தம்

9 புருஷர்கள் என்றது - ஜீவனும் புரிஅஷ்டகமும்

1. ஆகாசாதிபஞ்சகம்
2. சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகம்
3. வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகம்
4. பிராணவாயு பஞ்சகம்
5. மனாதி அந்தக்கரண சதுஷ்டயம்
6. அவித்தை
7. காமம்
8. கர்மம் என்பன புரியஷ்டகம்

பத்தாமவன் என்றது	- ஆத்மா
நதி என்றது	- சம்சாரம்
கரை என்றது	- மானுட சரீரம்
ஆப்தன் என்றது	- சத்குரு

10. ஜீவனுக்கு பந்தங்கள் - 7

1. துக்கம், 2. பிறவி, 3. கர்மம், 4. ராகத்துவேஷம், 5. கடும்பற்று, 6. அவிவேகம், 7. அஞ்ஞானம்

11. சப்தலோகங்கள் - 7

1. பூலோகம், 2. புவர்லோகம், 3. சுரர்லோகம், 4. மஹர்லோகம், 5. ஜனலோகம், 6. தபலோகம், 7. சத்யலோகம்

12. சப்த பதி சத்தியம் - தர்மகுல தத்துவம் - 7

1. இறைவனுக்கு, 2. கணவன் மனைவி, 3. சந்ததி,
4. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு (கற்பு), 5. ஞானேந்திரியம், கர்மேந்திரியம்,
6. அறுசுவை, 7. ஏழு பிறவிகளிலும் இணைந்து வாழ்வை புனிதப்படுத்துவேன்

13. 36 தத்துவங்களில் தானல்லாத தத்துவங்கள் - 7

1. ஆகாயம், 2. வாயு, 3. அக்கினி, 4. அப்பு, 5. பிருத்வி, 6. மாயை, 7. ஈஸ்வரன்

14. கீழ்லோகங்கள் -7

1. அதலம், 2. விதலம், 3. சுதலம், 4. தலாதலம், 5. இரஸாதலம், 6. மகாதலம்,
7. பாதாளம்

15. வித்தியா தத்துவங்கள் - 7

1. காலம், 2. நியதி, 3. கலை, 4. வித்தை, 5. அராகம், 6. புருடன், 7. மாயை

16. காரண காரிய நியதி - 7

1. துக்கம் எதனால் வந்தது	- சரீரத்தால்
2. சரீரம் எதனால் வந்தது	- கர்மத்தால்
3. கர்மம் எதனால் செய்யப்படுகிறது	- திரிவித கரணத்தால் (மனம், வாக்கு, காயம்)
4. திரிவிதகரணங்கள் எதனால் ஏவப்படுகிறது	- இராகத் துவேஷத்தால்
5. இராகத்துவேஷம் எதனால் உண்டாகிறது	- அபிமானத்தால்
6. அபிமானம் எதனால் ஏற்படுகிறது	- அவிவேகத்தினால்
7. அவிவேகம் எதனால் வந்தது	- அஞ்ஞானத்தினால்

அஞ்ஞானம் ஞானத்தால் நிவர்த்தியாகும்.

அஞ்ஞானத்துக்கு காரணம் என்ன? என்று நம்மால் ஊகிக்க முடிகிறதா?

நமக்குத் தெரியாமலே நம்முள் மறைந்து கிடக்கும் ஆணவம் மற்றும் எவ்வுயிர்க்கும் அன்பு செய்யாமை என்று சொல்லிப் பாருங்கள். சிந்தியுங்கள் செயல்படுங்கள். அஞ்ஞானம் அகன்று ஞானம் பிறக்கலாம்.

எட்டின் தொகைகள்

1. அஷ்ட ஆனந்தங்கள் - ஆனந்தத்தின் உபாதி அஷ்டகம்

1. விஷயானந்தம், 2. பிரஹ்மானந்தம், 3. வாசனாநந்தம், 4. முக்கியானந்தம், 5. நிஜானந்தம், 6. ஆத்மானந்தம், 7. அத்வைதானந்தம், 8. வித்தியானந்தம்

1. **விஷயானந்தம்** வனிதாதி விஷய லாபத்தில் தோன்றும் சுகம்
2. **பிரஹ்மானந்தம்** நித்திரை காலத்தில் தோன்றும் சுகம்
3. **வாசனாநந்தம்** நித்திரை தெளிந்தும் தெளியாவிடத்தில் தோன்றும் சுகம்
4. **முக்கியானந்தம்** விருப்பு, வெறுப்பின்றிய உணர்ச்சி (உபேக்ஷா புத்தி)யில் தோன்றும் சுகம்
5. **நிஜானந்தம்** யோகாப்பியாச பலத்தால் மனோலயமான இடத்தில் தோன்றும் சுகம்
6. **ஆத்மானந்தம்** பிரியமான வனிதாதி விஷய மத்தியில் தானே பிரிய சொரூபம் என்றறிந்த இடத்தில் தோன்றும் சுகம்
7. **அத்வைதானந்தம்** (ஆத்மா)வுக்கு அன்னியமான நாம ரூபப் பிரபஞ்சம் எல்லாம் மித்தை, தானே சத்தியவஸ்து என்னும் விவேகத்தில் தோன்றும் சுகம்
8. **வித்தியானந்தம்** தத்துவமஸியாதி மகாவாக்கியத்தால் உண்டாகும் அபரோக்ஷ ஞானத்தில் தோன்றும் சுகம்

2. அஷ்ட குருக்கள்

1. போதக குரு, 2. விகித குரு, 3. நிஷித்த குரு, 4. காமிய குரு, 5. சூசக குரு, 6. வாசக குரு, 7. காரக குரு, 8. வேதக குரு

3. அஷ்டப்பிரகாசம்

1. சூரியன், 2. சந்திரன், 3. மின்னல், 4. நட்சத்திரம், 5. அக்கினி, 6. புத்தி, 7. இந்திரியம், 8. ஜீவன்

4. அஷ்ட மூர்த்தங்கள்

1. ஆகாயம், 2. வாயு, 3. தேயு, 4. அப்பு, 5. பிருத்வீ, 6. சூரியன், 7. சந்திரன், 8. ஜீவன்

5. அஷ்டப் பிரக்ருதி

1. ஆகாயம், 2. வாயு, 3. தேயு, 4. அப்பு, 5. பிருத்வீ, 6. மனம், 7. புத்தி, 8. அகங்காரம்

6. ஞானத்திற்கு அந்தரங்க சாதனங்கள் - 8

1. விவேகம், 2. வைராக்கியம், 3. சமாதி சட்சம்பத்து, 4. முமூட்சுத்வம், 5. சிரவணம், 6. மனனம், 7. நிதித்யாசனம், 8. மகாவாக்கிய விசாரம்

7. அஷ்டாங்க யோகம்

1. **இயமம்** - பொதுக்கட்டுப்பாடு
2. **நியமம்** - சிறப்புக்கட்டுப்பாடு
3. **ஆசனம்** - உடலை அமர்த்தும் நிலை, பத்மாசனம் முதலியன
4. **பிரணாயாமம்** - மூச்சை அணுகுதல், ரேசகம், பூரகம், கும்பகம் (உட்சுவாசம், வெளிசுவாசம்)
5. **பிரத்தியாகாரம்** - புலன்களை அடக்குதல்
6. **தாரணை** - இரண்டற்ற மெய்ப்பொருளில் மனதை நிறுத்துதல்
7. **தியானம்** - மனதை நிறுத்தி நிலைக்கச் செய்தல்
8. **சமாதி** - சவிகற்பசமாதி, நிர்விகற்பசமாதி, மெய் உணர்வோடு ஒன்றி விடுதல்

8. சாத்வீக குணங்கள் - 8

1. நிராசை, 2. தவம், 3. பொறுமை, 4. கிருபை, 5. சந்தோஷம், 6. வாய்மை, 7. அறியாமை, 8. அடக்கம்

9. அஷ்டமா சித்திகள்

1. அனிமா, 2. மஹிமா, 3. லஹிமா, 4. கரிமா, 5. பிரகாமியம், 6. பிராப்தி, 7. ஈசித்வம், 8. வசித்வம்

1. **அனிமா** - நம் உடலை அளவாக (மிகநுண்ணியமதாக) ஆக்குதல்
2. **மஹிமா** - நம் உடலைப் பெரிதாக ஆக்குதல்
3. **லஹிமா** - நம் உடலை (லேசாக) எளிதாக ஆக்குதல்
4. **கரிமா** - நம் உடல் கடினமாக இருக்கும்படி ஆக்குதல்
5. **பிரகாமியம்** - நினைத்த இடத்திற்கு நினைத்த நேரத்தில் செல்லுதல்
6. **பிராப்தி** - நினைத்த பொருள் தனக்கு முன் வரும்படி செய்தல்
7. **ஈசித்வம்** - நினைத்த பொருளை படைத்து, காத்து, அழித்தல்
8. **வசித்வம்** - இயற்கை பூதங்களைத் தன்வயப்படுத்துதல்

10. அஷ்ட வாதங்கள்

வேதாந்தத்திலுள்ள முக்கிய வாதங்கள்

1. அஜாதவாதம், 2. அவச்சேதவாதம், 3. ஆபாசவாதம், 4. பிம்பப் பிரதிபிம்பவாதம், 5. சிருஷ்டிதிருஷ்டிவாதம், 6. திருஷ்டிசிருஷ்டிவாதம், 7. ஏகஜீவவாதம், 8. நாநாஜீவவாதம்

1. **அஜாதவாதம்** பிரம்மே எப்போதும் உள்ளதென்றும் ஜகத்து ஒருகாலும் உண்டாகவில்லை என்று கூறுவது. இது முடிந்த நிலை, பரஞானி அனுபவம்

2. **அவச்சேதவாதம்** அந்தக்கரணத்தில் அளவிடக்கூடிய சேதனம் ஒன்றே ஒழிய இரண்டில்லை என்றும், அந்தக்கரணமாகிய மனம் அசைந்தாலும், ஜீவாத்மா அசையாமல் சாக்ஷி மாத்திரமாக இருப்பின் அஃதே சிவம் எனக் கூறுவது.

3. **ஆபாசவாதம்** வியவகார தசையில் அந்தக்கரணம் (மனம்) பார்க்கக்கூடிய ரூபங்கள் (பிரதிபிம்பம்) அநேகமுண்டு. வியவகாரங்களும், அவைகளுக்குத் தான் உண்டு. சாக்ஷியாகிய ஜீவாத்மாவுக்கு இல்லை என்பதாம்.

4. **பிம்ப்பிரதிபிம்பவாதம்** பிம்பத்தைத்தவிர ஆரோமேயில்லை எனக் கூறுவது.

5. **சிருஷ்டி திருஷ்டிவாதம்** ஜகத்து பூர்வமிருந்து தான் தோற்றப்படுவது எனக் கூறுவது.

6. **திருஷ்டி சிருஷ்டிவாதம்** எப்போது திருஷ்டி (நினைப்பு, பார்வை) உண்டாகிறதோ, அப்போது தான் ஜக்த் உண்டாகிறது. பூர்வம் (முன்) இருக்கவில்லை எனக் கூறுவது.

7. **ஏகஜீவவாதம்** இந்த சேதன, அசேதன பிரபஞ்சம் முழுவதும் ஒரு ஜீவனுடைய கற்பனை சொப்பனத்தில் காணப்பட்ட பிரபஞ்சம் எப்படி ஒரு மனிதனால் கற்பிக்கப்பட்டதோ, அதுபோல ஜாக்கிரத்தில் காணும் பிரபஞ்சம் முழுதும் ஒரு ஜீவனுடைய கற்பனையே எனக் கூறுவது.

8. **நாநாஜீவவாதம்** மாயை, அதன் குணம், அதன் ஆற்றல், ஜீவேஸ்வர ஜகத்துக்கள் என்று பல வகைகளைச் சொல்லி ஏகரூபமாயிருக்கிற பிரம்மத்தைத் தெரிவிக்க வேண்டியிருப்பதால் நாநா ஜீவவாதம் எனப்படுகிறது.

11. அத்தியாசங்கள்

1. மித்தையாத்தியாசம், 2. இதராத்தியாசம், 3. இதரேதராத்தியாசம், 4. சத்தியாத்தியாசம், 5. நிரூபாதியாத்தியாசம், 6. சோபாதிகாத்தியாசம், 7. தருமாத்தியசம், 8. சம்மந்தமாத்ராத்தியாசம்

12. பிரம்மச்சரியத்தில் விட்டொழிக்கும் நெறிகள்

1. **தரிசனம்** = ஸ்திரீகளைப் பார்த்தல்
2. **ஸ்பர்சனம்** = ஸ்திரீகளைத் தொடுதல்
3. **கேலி** = கேலி செய்து பேசுதல்
4. **கீர்த்தனம்** = அழகுபட வர்ணித்தல்
5. **குப்தபாஷணம்** = மறைவிடத்திலிருந்து உரையாடல்
6. **சங்கல்பம்** = இவ்வாறு இருக்க வேண்டும் என்ற கற்பனை
7. **அத்யவாசம்** = இவளுடன் சேர்ந்து வாழ்வேன் என்ற உறுதி பூணல் (நிச்சயம்)
8. **கிரியாநிவர்த்தி** = தான் விரும்பியதை அனுபவித்தல்

13. காரணகாரியாதிகள்

1. **காரணகாரியம்** = மண், குடம்
2. **விகாரவிகாரியம்** = பால், தயிர்
3. **அம்சாஅம்ஸிகம்** = கடல், அலை, குமிழி
4. **குணம்குணி** = பசு, நிறம்
5. **தர்மாதர்மி** = வேப்பிலை, கசப்பு, இந்திரியம், விஷயம்
6. **உபாசனை, உபாசிகம்** = உபாசனை, மூர்த்தி
7. **ஆதாரம் ஆதேயம்** = நூல், மணிகள்
8. **பிரகாசபிரகாமியம்** = சூரியன், பிரதிபிம்பம்

14. அஷ்டபுரி

1. ஞானேந்திரிய பஞ்சகம், 2. கர்மேந்திரியபஞ்சகம்,
3. அந்தக்கரணபஞ்சகம், 4. வாயுபஞ்சகம்,
5. ஆகாசாதிபூதபஞ்சகம், 6. புத்தி (காமம்),
7. அவித்தை (விதை), 8. கர்மம்

ஒன்பதின் தொகைகள்

1. திருஷ்டாந்தங்கள் - 9

1. **கானர் நீர்** = அன்னமயகோசம்
2. **கிளிஞ்சலில் வெள்ளி** = பிராணமயகோசம்
3. **கந்தர்வநகர்** = மனோமயகோசம்
4. **கனாவூர்** = விஞ்ஞானமயகோசம்
5. **வான்மை** = ஆனந்தமயகோசம்
6. **கயிற்றில் பாம்பு** = ஜீவன்
7. **மலடிமைந்தன்** = ஈஸ்வரன்
8. **முயல் கொம்பு** = மாயை
9. **கட்டையில் கள்ளன்** = ஜகத்

2. அநிர்வசனீய லக்ஷணம் - 9

1. சத்து (இருப்பது)
2. அசத்து (இல்லாதது)
3. சதசத்து (இருப்பது இல்லாதது)
4. பின்னம் (பேதம்)
5. அபின்னம் (அபேதம்)
6. பின்னாபின்னம் (பேதா பேதம்)
7. சாவயவம் (வடிவம்)
8. நிரவயவம் (வடிவமில்லாதது)
9. சாவயநிரவயவம் (வடிவம், வடிவமில்லா)

3. நவ்வித சம்சாரம் - 9

1. ஞாதா 2. ஞானம், 3. ஞேயம், 4. கர்த்தா, 5. கர்மம், 6. கிரியை,
7. போக்தா, 8. போகம், 9. போக்யை

4. நவவித பக்தி - 9

1. **சிரவணம்** = பரிக்ஷித்து
2. **கீர்த்தனம்** = நாரதர்
3. **ஸ்மரணம்** = பிரகலாதர்
4. **பாதசேவனம்** = மகாலட்சுமி
5. **அர்ச்சனம்** = பிருதுசக்கரவர்த்தி
6. **வந்தனம்** = அக்ரூரர்
7. **தாஸ்யம்** = ஆஞ்சநேயர்

8. **சக்யம்** = அருஜுனன்
9. **ஆத்மநிவேதனம்** = மகாபலி

5. ப்ரஹ்ம வேத்தாவாய சந்யாசியின் இருதயத்தே இருக்கும் 9 தத்துவங்கள்

1. ஈஸ்வரர், 2. இரண்யகர்ப்பர், 3. விராட்டு, 4. விசுவன், 5. தைஜஸன்,
6. பிராக்ஞன், 7. பிராணன், 8. அபானன், 9. வியானன்

6. த்வம்பத வாச்சியார்த்தங்கள் - 9

1. சரீரத்திரயம் - ஸ்தூலம், சூட்சும, காரணம்
2. அவஸ்தாத்திரயம் - ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி
3. அபிமானித்திரயம் - விஷ்வன், தைஜஸன், பிராக்ஞன்

7. தத்பத வாச்சியார்த்தங்கள் - 9

1. சரீத்திரயம் - பிராட்டு, இரண்யகர்ப்பம், அவ்யாகிருதம்
2. அவஸ்தாத்திரயம் - ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்
3. அபிமானித்திரயம் - வைச்வானரன், சூத்ராத்மா, அந்தர்யாமி

8. அஸிபதம் வாச்சியார்த்தங்கள் - 9

1. சரீரத்திரயம் - சத்ரூபசக்தி, சித்ரூபசக்தி, ஆனந்த ரூபசக்தி
2. அவஸ்தாத்திரயம் - சர்வ்வியாபகம், சர்வப்பிரகாசம், சர்வானந்தம்
3. அபிமானித்திரயம் - பரிபூரணர், தேஜோமயர், பரமானந்தர்

9. நவதுஷ்டி (திருப்தி) 9 விஷயங்களையும் நிவர்த்தி செய்து திருப்தி அடைதல்

1. பிரகிருதி, 2. உபாதானம், 3. பாக்கியம், 4. காலம், 5. சப்தநிவர்த்தி,
6. ஸ்பர்சநிவர்த்தி, 7. ரூபநிவர்த்தி, 8. ரஸநிவர்த்தி, 9. கந்தநிவர்த்தி

பத்தின் தொகைகள்

1. தசவாயுக்கள் - 10

1. பிராணன், 2. வியானன், 3. அபானன், 4. சமானன், 5. உதானன், 6. நாகன், 7. கூர்மன், 8. கிரிகரன், 9. தேவதத்தன், 10. தனஞ்சயன்

2. தசநாடிகள் - 10

1. இடகலைநாடி, 2. பிங்கலைநாடி, 3. சுழுமுனைநாடி, 4. காந்தாரிநாடி, 5. ஹஸ்திஜிவ்ஹைநாடி, 6. பூஷாநாடி, 7. யசஸ்விநிநாடி, 8. குஹூநாடி, 9. அலம்புசாநாடி, 10. சங்கிநிநாடி

3. இயமம் - 10

1. அஹிம்சை (கொல்லாமை), 2. சத்தியம், 3. அஸ்தேயம் (திருடாமை), 4. பிரம்மச்சரியம், 5. க்ஷமை (பொறை), 6. திருதி (தைரியம்), 7. தயை, 8. ஆர்ச்சவம் (நேர்மை), 9. மதாகாரம், 10. சௌசம் (சுத்தம்)

4. நியமம் - 10

1. தவம், 2. சந்தோஷம், 3. ஆஸ்திக்கியம் (விசுவாசம்), 4. தானம், 5. ஈஸ்வரபூஜை, 6. வேதாந்த சித்தாந்த சிரவணம், 7. இலஜ்ஜை (நாணம்), 8. மதி, 9. ஜெபம், 10. விரதம்

5. புனிதம் - 10

1. **ஆகாசத்தில் புனிதமானது** = சிதாகாசம்
2. **வாயுவில் புனிதமானது** = பிராணன்
3. **அக்கினியில் புனிதமானது** = ஞானாக்கினி
4. **நீரில் புனிதமானது** = கங்காதீர்த்தம்
5. **மண்ணில் புனிதமானது** = பிருந்தாவன மண்
6. **ஒளியில் புனிதமானது** = ஆன்ம ஒளி
7. **ஓசையில் புனிதமானது** = மந்திர ஓசை
8. **மணத்தில் புனிதமானது** = தெய்வீக மணம்
9. **சுவையில் புனிதமானது** = அமிர்தம்
10. **உணர்ச்சியில் புனிதமானது** = பரபோதம்

6. லக்ஷணங்கள் - 10

1. பிரம்மலக்ஷணம், 2. ஈஸ்வரலக்ஷணம், 3. மாயையின்லக்ஷணம்,

4. ஜீவலக்ஷணம், 5. ஜகத்லக்ஷணம், 6. அந்தக்கரணலக்ஷணம்,
7. சாந்தவிருத்திலக்ஷணம், 8. கோரவிருத்திலக்ஷணம்,
9. மூடவிருத்திலக்ஷணம், 10. சக்தியின்லக்ஷணம்

பிரம்மலக்ஷணம் = சத்து, சித்து, ஆனந்தம்
ஈஸ்வரலக்ஷணம் = சமஷ்டி மனத்துடன் மாயையை தன்னுள் அடக்கி சிருஷ்டி செய்வது
மாயையின்லக்ஷணம் = அசத்து, ஜடம், துக்கம் விசாரித்தால் இல்லாமல் போவது (உண்மையை மறைத்திருப்பது)
ஜீவலக்ஷணம் = வியஷ்டி மனத்துடன் மாயைக்கு கட்டுப்பட்டு உயிர் இல்லாத சிருஷ்டி செய்வது
ஜகத்லக்ஷணம் = நாமரூபத்தை தன்னுள் அடக்கி இருப்பது
அந்தக்கரணலக்ஷணம் = சாந்த, கோர, மூட விருத்திகள்
சாந்தவிருத்திலக்ஷணம் = வைராக்கியம், பொறுமை இதில் சத்து, சித்து, ஆனந்தம் வெளிப்படும்
கோரவிருத்திலக்ஷணம் = காமம், குரோதம், லோபம் முதலிய கெட்ட குணங்கள் வெளிப்படும். இதில் சத்து, சித்து மட்டும் வெளிப்படும்.
மூடவிருத்திலக்ஷணம் = மயக்கம், கலக்கம், மந்தம், பயம் முதலிய சோம்பல் குணங்கள் வெளிப்படும். இதில் சத்து மட்டும் வெளிப்படும்
சக்தியின்லக்ஷணம் = எதையும் இயக்கி வைக்கக்கூடியது

7. இரண்டின் தொகை - 10

1. வருவதும், போவதும் இரண்டு = இன்பம், துன்பம்
2. வந்தால் போகாதது இரண்டு = புகழ், பழி
3. போனால் வராதது இரண்டு = மானம், உயிர்
4. தானாக வருவது இரண்டு = இளமை, மூப்பு
5. நம்முடன் வருவது இரண்டு = பாவம், புண்ணியம்
6. அடக்க முடியாதது இரண்டு = ஆசை, துக்கம்
7. தவிர்க்க முடியாதது இரண்டு = பசி, தாகம்
8. நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு = பந்தம், பாசம்
9. அழிவைத் தருவது இரண்டு = பொறாமை, கோபம்
10. எல்லோருக்கும் சமமானது இரண்டு = பிறப்பு, இறப்பு

8.

1. **முமூட்சுத்வம்** - பழுத்த நெல் போல்
2. **சதுர்விதகுருசேவை** - வெயிலில் காய்போடுவது போல்
3. **சாதுசங்கம்** - உரலில் போடுவது போல்
4. **குருஉபதேசம்** - உலக்கையால் குத்துவது போல்

5. **சிரவணம்** - உமியையும், அரிசியையும் பிரிக்கிற புடைப்பு
6. **மனனம்** - தவிடு சலிப்பது போல்
7. **நிதித்யாசனம்** - அரிசியைத் தீட்டுவது போல்
8. **சமாதி** - அன்னம் சமைப்பது போல்
9. **சாக்ஷத்காரம்** - அன்னம் புசிப்பது போல்
10. **சகஜம் (சமாதி)** - அன்னம் ரசம் ஒன்றாவது போல்

9. மஹாவிஷ்ணுவின் தசாவதார விளக்கம்

1. மச்சாவதாரம், 2. கூர்மாவதாரம், 3. வராகவதாரம், 4. வாமனவதாரம், 5. நரசிம்மாவதாரம், 6. பரசுராமாவதாரம், 7. ராமாவதாரம், 8. பலராமாவதாரம், 9. கிருஷ்ணாவதாரம், 10. கல்கி அவதாரம்

1. **மச்சாவதாரம்** உலகத்தில் 72% நீரின் தத்துவமான மீன்
2. **கூமாவதாரம்** நிலப்பகுதி 28% தத்துவமான குதிரை முகத்தில் பூமி உருண்டை தோண்டுதல்
3. **வராகவதாரம்** நிலம் என்ற ஜீவராசிகளின் உற்பத்தி இடம் பன்றி தத்துவம்
4. **வாமனாவதாரம்** உருவத்தில் சிறுத்து, உள்ளத்தில் உயர்தல் (வாமனம் என்றால் குள்ளம்)
5. **நரசிம்மாவதாரம்** ஐந்தறிவான விலங்கின பாதியும் மனிதன் பாதியும் உள்ள தத்துவம்
6. **பரசுராமாவதாரம்** எல்லா யுகங்களிலும் இருந்து சத்திய வழி காட்டும் தத்துவம்
7. **ராமாவதாரம்** நீதி நெறியுடன் ஆட்சி செலுத்துதல்
8. **பலராமாவதாரம்** கிருஷ்ணனின் உடன்பிறந்த நேசபாவ சகோதர தத்துவம்
9. **கிருஷ்ணாவதாரம்** எப்பொருளிலும் தானாகவே இருக்கும் களிப்பு தத்துவம்
10. **கல்கி அவதாரம்** பிரளயம் என்ற பூமி அழியும் தத்துவம்

10. முக்கியமான பத்து உபநிஷதங்கள்

உபநிஷதம்		வேதம்
1. ஈசாவாஸ்ய	-	(சுக்ல) யஜுர்
2. கேன	-	ஸாம
3. கட	-	(கிருஷ்ண) யஜுர்
4. பிரச்ன	-	அதர்வன
5. முண்டக	-	அதர்வன
6. மாண்டூக்ய	-	அதர்வன
7. தைத்ரீய	-	(கிருஷ்ண) யஜுர்
8. ஐத்ரேய	-	ரிக்
9. சாந்தோக்ய	-	ஸாம

10. பிருஹூதாரண்யக - (சுக்ல) யஜுர்

11. நற்குணங்கள் - 10

வாக்கின் நற்குணங்கள் 4	=	மெய்யுரை, நல்வார்த்தை, இன்னுரை, பயன்படுசொல்
மெய்யின் நற்குணங்கள் 3	=	கோயில் சூழ்தல், தவம் செய்தல், தானம் செய்தல்
மனத்தின் நற்குணங்கள் 3	=	அருள் நினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று

பதினொன்றின் தொகை

அதிகாரிகாண்டிகள் - 11

1. கர்மி, 2. முமூட்சு, 3. அப்பியாசி, 4. அனுபவி, 5. ஆரூடன், 6. விவேககதி, 7. விரக்திகதி, 8. தெய்வகதி, 9. கர்மகாண்டி, 10. பக்திகாண்டி, 11. ஞானகாண்டி

பனிரெண்டின் தொகை

கூடஸ்த நாமங்கள் - 12

1. அதிஷ்டானம், 2. சேதனன், 3. அந்தர்யாமி, 4. அனுசந்தானன், 5. சுயசந்தானன், 6. அவச்சின்னன், 7. ஜீவன், 8. பரமார்த்தன், 9. துரியன், 10. சாக்ஷி, 11. பிரத்தியக்காத்மா, 12. துவம்பதவக்ஷியார்த்தன்

1. அன்னத்தால்	பிராணனையும்
2. பிராணனால்	பலத்தையும்
3. பலத்தால்	தவத்தையும்
4. தவத்தால்	சிரத்தையும்
5. சிரத்தையால்	புத்தியையும்
6. புத்தியால்	மனதையும்
7. மனதால்	சாந்தியையும்
8. சாந்தியால்	சித்தத்தையும்
9. சித்தத்தால்	நினைவையும்

10. நினைவால் ஸ்திதப்பிரக்ஞையையும்
11. ஸ்திதப்பிரக்ஞையால் விஞ்ஞானத்தையும்
12. விஞ்ஞானத்தால் ஆத்மாவையும்

பெறுவதால், அன்னத்தைக் கொடுப்பவர் இவை எல்லாவற்றையும் கொடுத்ததாகிறது.

- நாராயண உபநிஷத்

பதிமூன்றின் தொகைகள்

1. ஞானத்திற்குரிய சத்குணங்கள் - 13

1. அடக்கம், 2. அன்பு, 3. அறிவு, 4. அவா அறுத்தல், 5. இரக்கம், 6. இன்சொல், 7. ஈகை, 8. ஒழுக்கம், 9. சாந்தம், 10. தவம், 11. நடுநிலை, 12. வாய்மை, 13. பக்தி

2. ராகத்துவேஷாதிகள் - 13

1. ராகம், 2. துவேஷம், 3. காமம், 4. குரோதம், 5. லோபம், 6. மோகம், 7. மதம், 8. மாத்ஸர்யம், 9. தற்பம், 10. அசூயை, 11. அகங்காரம், 12. ஈகை, 13. டம்பம்

பதிநான்கின் தொகை

சதுர்தவ வித்தைகள்

வேதம் 4, வேதாங்கம் 6, நியாயம் 1, மீமாம்ஸை 1, 19 ஸ்மிருதிகள் 1, 18 புராணங்கள் 1 (ஆக 14)

பதினைந்தின் தொகைகள்

1. மாயையின் பெயர்கள்

1. மாயை, 2. அவித்தை, 3. பிரகிருதி, 4. சக்தி, 5. அவ்யக்தம், 6. அவ்யாகிருதம், 7. அஜை, 8. அஞ்ஞானம், 9. தமம், 10. அநிர்வசநீயம், 11. துச்சம், 12. சத்யா, 13. தூலா, 14. மூலா, 15. யோநி

2. சமாதிக்கு இராஜயோகானுசாரமாயுள்ள பஞ்ச தசாங்கம்

1. இயமம், 2. நியமம், 3. தியாகம், 4. மௌனம், 5. தேசம், 6. காலம்,
7. ஆஸனம், 8. மூலபந்தம், 9. தேகசமத்தன்மை, 10. லக்ஷியத்திருஷ்டி,
11. பிராணாயாமம், 12. பிரத்யாகாரம், 13. தாரணை, 14. தியானம், 15. சமாதி

3. பதினைந்து கலைகள்

1. பிராணன், 2. சிரத்தை, 3. ஆகாயம், 4. வாயு, 5. அக்கினி, 6. அப்பு, 7. பிருத்வீ,
8. புலன்கள், 9. மனம், 10. அன்னம், 11. பலம், 12. தவம், 13. மந்திரங்கள்,
14. கர்மங்கள், 15. கர்மபலன்கள்

பதினாறின் தொகைகள்

1. பதினாறு பேறுகள்

1. துதிவாணி, 2. வீரம், 3. விஜயம், 4. சந்தானம், 5. துணிவு, 6. தனம்,
7. மதி, 8. தானியம், 9. சௌபாக்கியம், 10. போகம், 11. அறிவு, 12. அழகு,
13. புதிதாம் பெருமை, 14. அறம், 15. குலம், 16. நோயகல் பூண்வயது

2. கோவிலூர் மடத்தின் (மரபு) வேதாந்த பாடங்கள்

1. நாநாஜீவவாதக்கட்டளை,	2. கீதாசாரத்தாலட்டு,
3. சசிவன்னபோதம்	4. மஹாராஜதுறவு
5. வைராக்கியசதகம்	6. வைராக்யதீபம்
7. இலக்கணாவிருத்தி	8. அஞ்ஞவதைப்பரணி
9. வேதாந்த சூடாமணி	10. விவேகசூடாமணி
11. பஞ்சதசி	12. கைவல்யநவநீதம்
13. ஈசுவர கீதை	14. பகவத்கீதை
15. பிரம்ம கீதை	16. ஞான வாசிஷ்டம்

.

பதினெட்டின் தொகைகள்

1. கீதாசார விளக்கம்

1. **அர்ஜுன விஷாத யோகம்**
   அருஜுனன் என்ற நரன் அதாவது மனிதனுக்கு உண்டாகும் சஞ்சலம்
2. **ஸாங்க்ய யோகம்**
   சங்சலம் ஏன் என்ற கேள்வி உண்டாவது
3. **கர்ம யோகம்**
   கடமையைக் கருத்தாக கண்ணாகச் செய்தல்
4. **ஞானகர்ம சந்நியாஸ யோகம்**
   விளைவு அறிந்த விழிப்பு
5. **சந்நியாஸ யோகம்**
   உறவிலே கண்ட உண்மைத் தெளிவு
6. **தியான யோகம்**
   நான் யார்? என அறிவது
7. **ஞான விஞ்ஞான யோகம்**
   இயற்கை அறிவு
8. **அக்ஷரப் பிரஹ்ம யோகம்**
   சுத்த வெளி என்ற சத்
9. **ராஜவித்யா ராஜ குஹ்ய யோகம்**
   சுத்த வெளியே நான்
10. **விபூதி யோகம்**
    இயற்கையின் வளங்களை ரசித்தல்
11. **விஷ்வரூப தர்சன யோகம்**
    இயற்கையின் தோற்றங்களே எல்லாம்
12. **பக்தி யோகம்**
    இறைநிலையிடம் அன்பு
13. **க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞ விபாக யோகம்**
    உடல் + உயிர் இணைப்பு அறிதல்
14. **குணத்திரய விபாக யோகம்**
    சத் + ரஜத் + தமஸ் இணைப்பே நாம்
15. **புருஷோத்தம யோகம்**
    ஆறாவது அறிவான உத்தமம்
16. **தெய்வாசுர சம்பத் விபாக யோகம்**
    ஐந்து அறிவான விலங்குத் தனம், ஆறறிவான மனதால் உயர்ந்து தெய்வத் தனம் சம்பத்தை அறிதல்

17. **சிரத்தாத்திரய விபாக யோகம்**
 இறைநிலை முயற்சி
18. **மோக்ஷ சந்நியாஸ யோகம்**
 வீடு பேறு என்ற முக்தி அடைதல்

2. சூத்திரங்கள் - 18

1. போதாயனம், 2. ஆபஸ்தம்பம், 3. சதயஷாடம், 4. திரஹ்யாயனம்,
5. அகஸ்தியசகாகல்யம், 6. ஆச்வலாயணம், 7. சாம்பவீயம்,
8. காத்யாயனம், 9. வைகானசம், 10. சௌனகீயம், 11. பாரத்வாஜம்,
12. அக்னிவைச்யம், 13. ஜைமினீயம், 14. வாதுலம், 15. மாத்யந்தினம்,
16. கௌன்டின்யம், 17. கௌஷிதம், 18. ஹிரண்யகேசி

3. வாழ்க்கை - ஒரு பகவத் கீதை

பகவத் கீதையின் 18 அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளின் சாராம்சத்தை வாழ்க்கையின் 18 இனிய பாதைகளாக, படிகளாக, நெறிகளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நித்தமும் இதனை நினைவில் வையுங்கள். வாழ்க்கை மீது உங்களுக்கு நம்பிக்கை வருகிறதா? இல்லையா - பாருங்களேன்.

1. வாழ்க்கை ஒரு **அன்பு**	அனுபவிப்போம்
2. வாழ்க்கை ஒரு **அழகு**	அதிசயிப்போம்
3. வாழ்க்கை ஒரு **ஆன்மா**	உணர்ந்திடுவோம்
4. வாழ்க்கை ஒரு **இலக்கு**	எட்டிடுவோம்
5. வாழ்க்கை ஒரு **இரகசியம்**	வெளிப்படுத்துவோம்
6. வாழ்க்கை ஒரு **உறுதிமொழி**	நிறைவேற்றுவோம்
7. வாழ்க்கை ஒரு **விளையாட்டு**	விளையாடுவோம்
8. வாழ்க்கை ஒரு **வாய்ப்பு**	பயன்படுத்துவோம்
9. வாழ்க்கை ஒரு **வெகுமதி**	என ஏற்போம்
10. வாழ்க்கை ஒரு **சவால்**	எனச் சாதிப்போம்
11. வாழ்க்கை ஒரு **சாகசம்**	துணிந்து நிற்போம்
12. வாழ்க்கை ஒரு **சோகம்**	எதிர்கொள்வோம்
13. வாழ்க்கை ஒரு **துன்பம்**	வென்று நிற்போம்
14. வாழ்க்கை ஒரு **கடமை**	செய்து முடிப்போம்
15. வாழ்க்கை ஒரு **பாடல்**	என இசைப்போம்
16. வாழ்க்கை ஒரு **பயணம்**	நிறைவு செய்வோம்
17. வாழ்க்கை ஒரு **புதிர்**	விடுவிப்போம்
18. வாழ்க்கை ஒரு **போராட்டம்**	போராடுவோம்

இருபத்தொன்றின் தொகை

கீதாசாரத்தாலாட்டு என்ற நூலில் இருக்கும் நியாயங்கள்

1. **பீஜ அங்குர நியாயம்**
   பீஜம் - விதை, அங்குரம் - முளை
2. **அயக் காந்த நியாயம் - சூசி காந்த நியாயம்**
   அயம் - இரும்பு, காந்தம் - இழுத்தற் சக்தி உடைய கல்
   சூசி - ஊசி
3. **தப்த அயப் பிண்ட நியாயம்**
   தப்த - காய்ச்சிய, அயம் - இரும்பு
   பிண்டம் - துண்டம்
4. **தப்த ஜல அக்னி நியாயம்**
   தப்த - காய்ச்சிய, ஜல - நீர், அக்னி - நெருப்பு
5. **ரத்த ஸ்படிக நியாயம்**
   ரத்தம் - சிவப்பு, ஸ்படிகம் - படிகக் கல்
6. **ஆதித்ய அந்தகார நாச நியாயம்**
   ஆதித்யன் - சூரியன், அந்தகாரம் - இருட்டு, நாசம் - அழிவு
7. **கண்ட சாமீகர நியாயம்**
   கண்டம் - கழுத்து, சாமீகரம் - பொன் ஆபரணம்
8. **நிவாத ஸ்தல தீப நியாயம்**
   வாதம் - சூறைக்காற்று, நிவாதம் - காற்றில்லாத, ஸ்தலம் - இடம்
   தீபம் - விளக்கு
9. **குஹா அந்தகார தீப தெரிசன நியாயம்**
   குஹா - குகை (குகையில் நீண்டகாலமாக இருக்கும்)
   அந்தகாரம் - இருட்டு, தீபம் - விளக்கு, தெரிசனம் - பார்த்தல்
10. **சுத்திகா ரஜத நியாயம்**
    சுத்திகா - கிளிஞ்சல், ரஜதம் - வெள்ளி
11. **தக்த பட நியாயம்**
    தக்த - எரிக்கப்பட்ட, படம் - வேஷ்டி
12. **தருச்சேத ஆர்த்ர நியாயம்**
    தரு - மரம், சேதம் - வெட்டிய, ஆர்தரம் - ஈரத்தன்மை
13. **பிம்பப் பிரதிபிம்ப நியாயம்**
    பிம்பம் - ஆகாச சூரியன், பிரதிபிம்பம் - கடஜலசூரியன்
14. **சமுத்ர புத்புத நியாயம்**
    சமுத்ரம் - கடல், புத்புதம் - குமிழி
15. **மரு மரீசிகா நியாயம் - மிருக திருஷ்ணிகா நியாயம்**
    மரு - பாலைவனம், மருசிகா - சூரிய கிரணம், மிருகா - மான்,

திருஷ்ணிகா - விரும்பும் ஜலம் + கானல்

16. **கமல பத்ர உதல நியாயம்**

கமலம் - தாமரை, பத்ரம் - இலை, உதகம் - நீர்

17. **திந்திரிணி பல சர்ம நியாயம்**

சிந்திரிணி - புளி, பலம் - பழம், சர்மம் - தோல்

18. **பங்க கீட நியாயம்**

பங்கம் - சேறு, கீடம் - பிள்ளைப்பூச்சி

19**. தக்ர நவநீத நியாயம்**

தக்ரம் - மோர், நவநீதம் - வெண்ணெய்

20. **அர்த்த ஜாதீய நியாயம்**

அர்த்தம் - பாதிப்பாகம், ஜாதீயம் - வயோதிகமாயிருத்தல்

21. **துஷ்யது துர்ஜ்ஜன நியாயம்**

துஷ்யது - சந்தோஷமடையட்டும், துர்ஜ்ஜன - கெட்டவர்கள்